Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 023 | சனிக்கிழமை | மார்கழி 4 ஆம் நாள் 19 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## ஐவர் இறப்பு: கொரோனா காவு 165

கொழும்பு, டிசெ.19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார். இவர்களுடன் நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் நாட்டில் சாவடைந்தவர்களின் எண்

19

## மூன்றாவது அலையில் யாழ்ப்பாணத்தில் 100!

யாழ்ப்பாணம், டிசெ.19

நாட்டில் கொரோனா மூன்றாவது அலை உருவான பின்னர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 100 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட மருதனார்மடம் சந்தைக் கொரோனாக் கொத்த

19

## இலங்கை வரும் ஐ.நா. பிரதிநிதி!

### கோத்தா, மஹிந்த, சம்பந்தனுடன் சந்திப்பு



கொழும்பு, டிசெ.19

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவரை செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், இலங்கைக்கு அனுப்பவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங் களில் இருந்து அறியமுடிகின்றது.

19

# யாழில் நேற்றும் நால்வருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், டிசெம்பர்19

யாழ்ப்பாணத்தில் நேற்று நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கும், உரும்பிராயைச் சேர்ந்த ஒருவருக்குமே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## திருநாவற்குளத்தில் 4 பேருக்கு தொற்று!

வவுனியா, டிசெ.19

வவுனியா திருநாவற்குளத்தில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுடன் சேர்த்து வவுனியா மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 31ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்

19



## திருநெல்வேலிச் சந்தைக்கு சென்ற ஒருவருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் கடந்த புதன்கிழமை 393 பேரின் மாதிரிகள்

19

## சந்தை குத்தகைக்காரரின் குடும்பத்தினருக்கு தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்றுக்குள்ளான இருவரும் பெண்க

19

## சண்டிலிப்பாய் பெண்ணுக்கு தொற்று: தொடர்புபட்டவர்கள் டெங்கு ஒழிப்பில்

### பிரதேச செயலகத்தினர் மீது சுகாதார பிரிவினர் கடும் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ.19

சண்டிலிப்பாயில் நேற்றுமுன்தினம் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவருடன் தொடர்புடைய 52 பேர் சண்டிலிப்பாயின் பல இடங்களுக்கும் சென்றுள்ளமை தெரியவந்து

19

## அறிவுறுத்தலை மீறி வீதியில் விற்பனை!

யாழ்ப்பாணம், டிசெ.19

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக வடக்கில் சந்தைகள் மூடப்பட்டுள்ள நிலையில், திருநெல்வேலி சந்தைக்கு வெளியே வீதியோரம் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டனர்.

மருதனார்மடம்,

19

## பலசரக்கு வியாபாரம் செய்பவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம்போதனா மருத்துவனை ஆய்வு கூடத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

44 வயதுடைய இவர் சுன்னாகம், சூரவத்தையில் பலசரக்குக் கடை வைத்து

19

## காரைக்குடிக்கு விரைவில் கப்பல்

வவுனியா, டிசெ.19

காங்கேசன் துறைமுகத்தில் இருந்து தமிழகத்தின் காரைக்குடிக்கான பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு ஆளுநர்

19

## 800 ஆண்டுகளுக்கு பின்னர் அதிசயம்!

கொழும்பு, டிசெ.19

இன்று இரவு வானில் கிரகங்கள் ஒன்று சேர்வதைக் காண முடியும் என்று வானியல் நிபுணர் அனுர சி பெரேரா தெரிவித்துள்ளார்.

800 ஆண்டுகளுக்கு

19

## சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு 2,500 ஏக்கரில் விவசாயக் காணி!

வவுனியா, டிசெ.19

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கோ, அதிகாரிகளுக்கோ தெரியப்படுத்தாது, வவுனியா வடக்கில் 2 ஆயிரத்து 300 ஏக்கர் காடு அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக குடியேற்றம் செய்யப்பட்ட பெரும்பான்மையின மக்களுக்கு விவசாயக் காணிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

19

## 45 நாள்களேயான சிசு கொரோனாவால் காவு!

கொழும்பு, டிசெ.19

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 45 நாள்களேயான பச்சிளம் ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

19

# புதிய அரசமைப்பு வரும்வரை மாகாண தேர்தல் வேண்டாம்!

## சிங்கள தேசியவாத அமைப்புகள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

**கொழும்பு, டிசெ. 19**

**புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கு சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகின்றன எனவும் மேற்படி ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் உதயனிடம் கருத்து வெளியிட்ட தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார ஆகியோர் தெரிவித்ததாவது:

'நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள மாகாணசபை முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். அது ஒரு அபிவிருத்தி பொறிமுறையாக பரிணமிக்க வேண்டும். அதற்கு தேவையான நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அதேபோல பொலிஸ் உள்ளிட்ட பிரிவினைக்கு வழிவகுக்கக்கூடிய விடயங்கள் நீக்கப்படவேண்டும். புதிய அரசமைப்பின் ஊடாக அரசாங்கம் இதனை செய்யவேண்டும். தேர்தலுக்கு முன்னரே புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுமானால் புதிய அரசமைப்பு வருவதற்கு முன்னர் எதற்காக மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும்? தேவையான மாற்றங்களை செய்துவிட்டு மக்களுக்கான அபிவிருத்தி சபையாக மாகாணசபைகளை மாற்றிவிட்டு தேர்தலுக்கு செல்வதே சிறப்பு. அதுவரைக்கும் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்றனர். (ம-44)



# புலிகளைப் புகழ்ந்தால் சிறையில் அடைப்போம்

## விரைவில் அதற்குரிய சட்டம் என்கின்றார் அமைச்சர் சரத்

கொழும்பு, டிசெ. 19

தமிழீழ விடுதலை புலிகளைப்பற்றி இலங்கை நாடாளுமன்றத்தில் இனி புகழ்ந்து கருத்துரைத்தால் அவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைப்பதற்கான சட்டத்தை விரைவில் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, கொழும்பில் நேற்று முன்தினம் மாலை உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளு மன்றத்துக்குள் வைத்து தமிழ் மக்களை தூண்டிவிடுகின்ற பேச்சுக்களை வெளியிடுவதோடு மறுபக்கத்தில் சிங்கள மக்களைக் கோபப்படுத்தும் வகையிலும் பேசுகின்றனர். எனினும் ஜேர்மன் போன்ற நாட்டின் நாடாளுமன்றத்தில் ஹிட்லரையும் நாசி கட்சியையும் புகழ்ந்து பேசுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் அளவுக்கான குற்றமாகக் கருதப்படும்.

அதேபோல சட்டங்களை நாங்களும் நாடாளுமன்றத்துக்குள் கொண்டுவருவோம். அவ்வாறு செய்தால்தான் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி புகழ்ந்து பாடி அதனூடாக தமிழ் மக்களை திசைதிருப்புவதற்கான முயற்சிகளை எங்களால் தடுக்கமுடியும் - என்றார். (ம-இ)

# அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்

## காணாமல்போனோரின் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 19

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று அறிகிறோம் என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆயிரத்து 400 நாள்களாக வவுனியாவில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டம் மேற்கொண்டு வரும் குறித்த உறவுகள் நேற்றையதினம் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தவிருந்தனர். அதற்கு வவுனியா நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

இந்நிலையில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இன்றுடன் தாய்மாரின் போராட்டம் ஆயிரத்து 400 நாள்களை எட்டுகிறது. எங்கள் ஜனநாயக போராட்டத்துக்கு உலகத்தின் பார்வை உள்ளது. இந்த நாளில், நாங்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் உதவியை தொடர்ந்து நாடுகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட நமது பிரச்சினை தமிழ் இனத்தின் வாழ்வுரிமைக்கான பிரச்சினை. இதனைத் தீர்க்க இந்த 3 தரப்புக்களால் மட்டுமே எமக்கு உதவ முடியும்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படப்போகிறார்கள் என்ற செய்தி எமக்கு கிடைத்திருக்கிறது. அதுபோல எமது போராட்டத்தில் ஈடுபடும் சில தாய்மார்களின் பிள்ளைகளும் விடுவிக்கப்படவுள்ளனர் என எமக்கு தகவல் கிடைத்துள்ளது - என்றனர். (ம-110)



# மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்யமுடியாது!

## சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

'மாகாணசபை முறைமையை எடுத்த எடுப்பிலேயே நீக்கிவிடமுடியாது. அது தொடர்பில் ஆழமான பரந்து பட்ட கலந்துரையாடல் அவசியம்' என்று சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மாகாணசபை முறைமை அவசியமில்லை என சிலர் வலியுறுத்திவரும் நிலையில், அம்முறையை நாட்டுக்கு தேவையில்லையா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 'மாகாண சபை முறைமை தொடர்பில் நாட்டு மக்களாலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரமே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இது தொடர்பில் இந்தியாவுடனும் உடன்படிக்கை உள்ளது. எனவே, எடுத்த எடுப்பில் இம்முறைமையை நிராகரித்துவிட முடியாது. மாகாணசபை முறைமையிலுள்ள சாதக, பாதக தன்மை தொடர்பில் ஆழமான பரந்தப்பட்ட கலந்துரையாடல் அவசியம். மக்கள் மற்றும் ஆன்மீக தலைவர்களின் கருத்துகளும் உள்வாங்கப்படவேண்டும். அதேவேளை, எம்.சி.சி உடன்படிக்கை கைச்சாத்திடப்படாவிட்டாலும் அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவில் எவ் வித பாதிப்பும் ஏற்படாது.' என்றார். (ம-44)

# பலாலி விமான நிலையத்தை மூடுவதற்கே அரசு திட்டமிடுகிறது

## டக்ளஸ், அங்கஜன் மௌனம் என சுரேஸ் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகவோ பிராந்திய விமான நிலையமாகவோ தொடர்ந்து செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பலாலி விமான நிலையத்தை மூடுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை அரசு கைவிடவேண்டும் என்றும் கோரினார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்மேலும் தெரிவித்ததாவது:

இந்த விமான நிலையத்தை சீரமைக்க இந்திய அரசு இதற்காக 300 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது.

அந்த விமான ஓடு பாதை நீளமாக்குவதன் மூலம்தான் பெரிய விமானங்கள் குறிப்பாக 100 தொடக்கம்150 க்கும் மேற்பட்ட பயணிகள் வந்து இறங்கக்கூடிய விமான நிலையமாக மாற்றமுடியும் இதற்கு இந்திய அரசு மேலும் 300 மில்லியன் ரூபா வழங்கியிருந்தது. பணம் வழங்கி ஒரு வருடம் கடந்த நிலையில் கொரோனா காலத்திலும் இதனை அபிவிருத்தி செய்திருக்கமுடியும். ஆனால் அது நடக்கவில்லை.

மாறாக, அரசு சர்வதேச போக்குவரத்துக்கு அல்லது பிராந்திய போக்குவரத்துக்கு இந்த விமான நிலையத்தைப் பயன்படுத்தாது மூடவுள்ளது என அறிகின்றோம். நாடாளுமன்றம் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் அபிவிருத்தியும் வேலைவாய்ப்புமே. ஆனால் இந்திய அரசிமிருந்து கிடைத்த இந்த அபிவிருத்தி முழுமையாக எங்களின் கையைவிட்டுப் போகக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அரசுடன் இருக்கும் இவர்களும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயம் தொடர்பாக உடனடியாக அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (த-20)

# அரசியல் கைதிகளை விடுவிக்க அரசியலுக்கு அப்பால் செயற்படுங்கள்

## அரச, எதிர்த்தரப்பு எம்.பிக்களிடம் வலியுறுத்துகின்றது அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பு

**கொழும்பு, டிசெ. 19**

**அரசியல் கைதிகள் விடயத்தில் அரச தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சுய அரசியலுக்கு அப்பால் அரசியல் கைதிகள் விடயத்தைக் கையாண்டு அவர்களை வகைப்படுத்தாது விடுவிக்க நடவடிக்கை எடுப்பதே கௌரவமாக அமையும். தமிழர் அரசியலுக்கான அங்கீகாரமாகவும் அமையும்.**

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதுபற்றி அந்த அமைப்பு விடுத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பேரினவாதத்தின் சிறைக்கைதிகளாக இருக்கும் அரசின் ஊடக இணைப் பேச்சாளர்களான கம்மன்பிலவும் அவர் தோழர்களும் "நாட்டில் அரசியல் கைதிகளோ, தமிழ்க் கைதிகளோ இல்லை" என்று கூறுகின்றனர். இது கொரோனாவை விடப் பயங்கரமானது. தமிழர்களையும் அரசியல் கைதிகளையும் புண்படுத்தும் கூற்று. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசியல் கைதிகள் உள்ளனர் என ஏற்றுக்கொண்டால் நாட்டில் அரசியல் பிரச்சினைகள் உள்ளன என்றாகிவிடும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய கடப்பாடும் ஆட்சியாளர்களுக்கு ஏற்படும். இந்த உண்மை நிலையை மறைக்கவும் இவ்வாறு கூறுகின்றனர்.

நாட்டில் அரசியல் பிரச்சினை இல்லை, இருப்பது அபிவிருத்திப் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் என்றே தேர்தல் காலங்களில் கூறினர். அதனைக் காக்கவுமே தொடர்ந்து அரசியல் கைதிகள் என எவரும் இல்லை எனக் கூறுகின்றனர். அரசியல் கைதிகளுக்குப் பிணை அல்லது விடுதலை வேண்டுமெனில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும். அல்லது அதனை நீக்கவேண்டும். இதனைச் செய்வதற்கு ஆட்சியாளர்கள் முன்வரப் போவதில்லை. ஏனெனில், பயங்கரவாதத் தடைச் சட்டமே எதிர்காலத்திலும் வடக்கு கிழக்கில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர்காலத்தில் ஆட்சியாளர்களுக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதே உண்மை. என்றுள்ளது. (து)

# நிதிமோசடி வழக்கை பேசித் தீர்க்க மறுப்பு

## விசாரணைக்காக ஒத்திவைப்பு

நிதி மோசடி தொடர்பில் 'புளூ ஓசன் பிறீஸ்' மற்றும் 'புளூ ஓசன் றியாலிற்றி' ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு எதிரான வழக்கை பேசித் தீர்க்க பிரதிவாதிகள் இணங்காமையால் வழக்கை கல்கிசை நீதிவான் நீதிமன்று விசாரணைக்காக மார்ச் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கொழும்பில் அமைக்கப்படும் சொகுசு தொடர்மாடிக் குடியிருப்பில் வீடுகளை வழங்குகிறோம் எனத் தெரிவித்து மக்களிடம் 270 மில்லியன் ரூபாவைப் பெற்று, இணங்கிய கால எல்லையில் அந்த சொத்துக்களை அவர்களுக்கு வழங்காமையால் மோசடி நடந்தது என வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே பேச்சு நடத்த பிரதிவாதிகள் அடிப்படை ஆட்சேபனை தெரிவித்தனர். அது தொடர்பில் பிரதிவாதிகளும் முறைப்பாட்டாளர்களும் எழுத்து மூலம் சமர்ப்பணம் செய்தபின்னர் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-இ)

# உயர்கற்கை மாணவர்கள் கடனுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, டிசெ. 19

நாட்டில் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பைத் தவறவிட்ட மாணவர்களுக்கு இலங்கை கல்வியமைச்சு ஆண்டுதோறும் வழங்குகின்ற வட்டியற்ற கடன் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2017, 2018 மற்றும் 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் ஒரு தடவையில் 3 சாதாரண சித்திகளை (எஸ்) பெற்றிருக்க வேண்டியதுடன் சாதாரணதர பொதுப் பரீட்சைக்காக குறைந்த பட்சம் 30 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களை உயர்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுச் சமர்ப்பிக்க முடியும். ஜனவரி மாதம் 31ஆம் திகதியுடன் விண்ணப்ப கால எல்லை முடிவடைகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (துரி-4)

*மருத்துவ பகிஷ்கரிப்பால் சிறுமி இறந்தாரா?*

# மருத்துவமனை ஊழியர்களுக்கு பிடியாணை பிறப்பித்தது நீதிமன்று

கொழும்பு, டிசெ. 19

மட்டக்களப்பு - தேத்தாதீவில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனை ஊழியர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த சிறுமி படுகாயங்களுடன் அந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

அன்றையதினமே ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அந்த மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் க.கலாரஞ்சனி, "கதிரியக்கவியலாளர்கள் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையால், விபத்துக்குள்ளான சிறுமிக்கு உயிர்காப்பு படங்களை பெறமுடியாது போனது" என்று கூறியிருந்தார்.

இந்தநிலையில், கதிரியக்க பிரிவினர் மற்றும் அன்றையதினம் கடமையிலிருந்த மருத்துவர் உள்ளிட்ட சிலருக்கு மட்டக்களப்பு நீதிவான் மன்று நேற்றுப் பிடியாணை பிறப்பித்தது. (த-இ)

# மன்னார் தொற்றாளர்கள் 17 பேரும் குணமடைந்தனர்

மன்னார், டிசெ.19

மன்னாரில் இதுவரை அடையாளம் காணப்பட்ட 17 கொரோனாத் தொற்றாளர்களும் குணமடைந்துள்ளனர் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பங்குனி மாதம் தொடக்கம் தற்போது வரை 4 ஆயிரத்து 170 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 17 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

வெளிமாவட்டத்தவர்கள் 13 பேரும் உள்ளூரைச் சேர்ந்த 3 பேரும் இதில் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-60)



# மாணவன் இறப்பதற்கு முன்னரான சி.சி.ரி.வி. பதிவுகளை ஒப்படைக்குக

## கோப்பாய் பொலிஸாருக்கு மன்று உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் இளங்குன்றன் சடலமாக மீட்கப்பட்டமை பற்றிய வழக்கில், அந்தப் பகுதிகளில் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் பதிவான சி.சி.ரி.வி. காணொளியைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் கோண்டாவில் வன்னியசிங்கம் வீதியிலுள்ள விடுதி ஒன்றில் கடந்த நவம்பர் 17ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது இறப்பில் சந்தேகம் உள்ளது என்று மாணவனின் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். வழக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று உறவினர்கள் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

இந்தநிலையில், கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாண நீதிவான் மன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது, இறந்த மாணவனின் உறவினர்கள் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி ச.சுகாஸ், அந்தப் பகுதியிலுள்ள சி.சி.ரி.வி. கமராக்களைப் பார்வையிடுவதற்கும், அவர் பயன்படுத்திய தொலைபேசியை பரிசீலனை செய்வதற்கும் மன்று அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்திருந்தார். அதை ஏற்ற நீதிமன்று அது பற்றிய உத்தரவை பொலிஸாருக்கு விடுத்திருந்தது.

இந்தநிலையில், வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. பொலிஸார் சி.சி.ரி.வி. தரவுகளை மன்றில் ஒப்படைத்தனர்.

அவற்றைப் பார்வையிட்ட பின்னர், "சடலம் மீட்கப்பட்ட தினமான 17ஆம் திகதி நண்பகல் பெறப்பட்ட பதிவையே பொலிஸார் மன்றில் பாரப்படுத்தியுள்ளனர் என்று சட்டத்தரணி நீதிவான் பீற்றர்போலின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து நவம்பர் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் பெறப்பட்ட சி.சி.ரி.வி. காணொளியையும் பெற்று மன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-26)

# வீதியோரங்களில் மரக்கறி விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடக்கு மாகாணத்தில் சந்தைகள் பூட்டப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதியோரங்களில் நேற்று மரக்கறி விற்பனை நடைபெற்றது.

மழை பெய்துகொண்டிருந்தபோதும் வியாபாரிகள் சிலர் மழையில் நனைந்தவாறும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவைதவிர, முன்னர் ஊரடங்கு நடைமுறையில் இருந்தபோது மரக்கறிகளை நடமாடும் வாகனங்களில் கிராமங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்துவந்தனர். அந்தமுறைமை நேற்று மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. (க-17)

# 60 வருடங்களான மலைவேம்பு பாறி வீழ்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 19

நீர்வேலி தெற்கு முருகையா கோவிலுக்கு அருகில் பழைமை வாய்ந்த மலைவேம்பு ஒன்று பாறி வீழ்ந்துள்ளது.

எனினும், கோவிலுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. அந்த மரம் 60 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

# ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றினால் நடவடிக்கை

## அஜித் ரோஹண மீண்டும் எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.19**
**பொதுப்போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் பேருந்துகளின் ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றால் சட்டநடவடிக்கை எடுக் கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்தார். இதையடுத்து பொலிஸ்மா அதிபர் அது தொடர்பான சுற்று நிரூபத்தை அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பியுள்ளார். இதேவேளை சுகாதார அமைச்சரால் கடந்த ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப் பட்ட விசேட வர்த்தமானியில் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது உரிய அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. அதற்கமைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன அது தொடர்பில் அறிக்கை வெளியிட்டிருந்ததுடன், அதில் பொது போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் பஸ்களில் இருக்கையின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் ஏற்றமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த உத்தரவுக்கு புறம்பாக செயற்படுவோருக்கு எதிராக தண்டனை சட்டக்கோவை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## அமைச்சக வேலைவாய்ப்பு; குறுஞ்செய்திக்கு ஏமாறாதீர்!

### இலங்கை அரசு எச்சரிப்பு

கொழும்பு, டிசெ.19
அமைச்சகங்களில் வேலை வாய்ப்புக்களைத் தருவதாகத் தெரிவித்து அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கு ஏமாற்றம் அடைய வேண்டாம் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.



சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சகம், முதன்மை கைத்தொழில், சமூக நல அமைச்சகம் ஆகியவற்றில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன என கூறியே இந்தக் குறுஞ்செய்திகள் அனுப்படுகின்றன.
அரசை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் பரப்பப்படும் இத்தகைய தவறான பிரச்சாரங்களுக்கு பொதுமக்கள் ஏமாற்றம் அடைய வேண்டாம் என அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

## 600 ஊழியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ.19
மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 600 ஊழியர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர் என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி சுமித் அழகக்கோன் தெரிவித்துள்ளார்.
இலஞ்ச ஊழல் தொடர்பில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ற-இ)

## நாட்டில் தயாரித்த 37 மருந்துகளின் தரத்தை ஆராயுமாறு ஆலோசனை

கொழும்பு, டிசெ.19
கொரோனா ஒழிப்புக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 37 மருந்து வகைகளின் தரம் தொடர்பில் ஆராயுமாறு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியால் உள்நாட்டு மருத்துவ தேசிய சபை மற்றும் ஆயுர்வேத திணைக்களம் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
மருந்து வகைகளின் நோய் எதிர்ப்பு தரத்தின் சாதகத் தன்மையை ஆராய்ந்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் இந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
இதையடுத்து, இதற்கான நடவடிக்கைகளை உணவு ஔடத ஆயுள்வேத திணைக்களம் மற்றும் உள்நாட்டு மருத்துவ தேசிய சபை ஆகியன முன்னெடுத்துள்ளன. மேலும், தனிமைப் படுத்தல் நிலையங்கள், இராணுவத்தினர் மற்றும் கடற்படை யினருக்கு இந்த மருந்து வகைகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ-இ)



## கடமையேற்றார் ஜெனரல் பிரபாத்

கொழும்பு, டிசெ.19
இராணுவத்தின் 56வது பிரதம அதிகாரியாக இலங்கை சமிக்ஞை படையணியின் கேர்னல் கொமடாண்ட் மேஜர் ஜெனரல் பிரபாத் தெமடன்பிட்டிய, தனது கடமைகளை இராணுவத் தலைமையகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். இராணுவத்தின் 56வது பிரதம அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியின் கட்டளை அதிகாரியாக கடமையாற்றினார். (வ-இ)

## சஜித்தின் செயலாளராக குணரத்ன வன்னிநாயக்க

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வின் தனியார் செயலாளராக (சட்) சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.
ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக சட்டத் துறையில் ஒரு முக்கிய நபராக இருந்த அவர் உச்சநீதிமன்றத்தில் சட்டத்தரணியாக உள்ளார் என்பதுடன் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளராக பெயர் குறிப் பிடப்பட்டு இருந்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது. (வ-இ)



## மாலைதீவில் உடல்கள் அடக்கம் முஸ்லிம்களை ஒதுக்கும் செயல்!

கொழும்பு, டிசெ.19
கொரோனாவால் உயிரிழந்த இலங்கை முஸ்லிம்களின் சடலங்களை மாலைதீவில் அடக்கம் செய்வது இலங்கையில் முஸ்லிம் சமூகம் மேலும் ஒதுக்கிவைக் கப்படுவதற்கு வழிவகுக்கும் என மத நம்பிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் அஹ்மெட் சஹீட் தெரிவித்துள்ளார்.
இந்த வேண்டுகோள் முஸ்லிம் சமூகத் திடமிருந்தோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ வெளியாகவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
உலக சுகாதார ஸ்தாபனம் தமது வழிகாட்டுதல்களில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம் என தெரிவித்துள்ளதையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (ற-இ)





கொரோனா பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நேற்று முன்தினம் முதல் கல்முனை நகர் முடக்கப்பட்டது. இதனால் நேற்று கல்முனை நகர், கல்முனைச் சந்தை மற்றும் வீதிகள் வெறிச்சோடியுள்ளன. (ற-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொரோனாத் தடுப்புக்காக புதிய சிகிச்சை நிலையங்கள்

## சுகாதார அமைச்சு அவதானம்



**கொழும்பு,டிசெ.19**

**கொரோனாத் தொற்று நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், தொற்றுத் தடுப்புக்கான புதிய சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்திள்ளது.**

அதற்கான நிதி உதவிகளை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் தினமும் புதிதாக 500 தொடக்கம் 600 க்கும் இடைப்பட்ட வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் புதிதாக சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதிக எண்ணிக்கையானவர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையில் வசதிகள் கொண்ட மருத்துவமனைகளை உடனடியாக சுகாதார அமைச்சின் கீழ் சுவீகரித்து, அவற்றை கொரோனா வைரஸ் சிகிச்சை மத்திய நிலையங்களாக மாற்றுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-இ)

# பிரச்சினைகளில் குளிர்காய்தல்

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதியுங்கள் என்று பல தரப்புகளிடம் இருந்து கிளம்பும் கோரிக்கைகளை சற்றும் சட்டை செய்யாதிருக்கின்றது கோத்தாபய தலைமையிலான அரசு.

ஒரு சிறுபான்மை இனத்தின் மத உணர்வில் நம்பிக்கையில் நியாயமான காரணங்கள் ஏதுமின்றிக் கைவைத்திருக்கும் அரசு அனைவரின் வேண்டுகோள்களையும் புறந்தள்ளி அடக்குமுறைப் போக்குடன் அலட்சியப்போக்குடன் நடந்துகொள்கின்றது. முஸ்லிம் சமூகத்தினரும், ஏனையோரும் இணைந்து தங்களின் கோரிக்கையை வலியுறுத்தி சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டாலும் அவை விழலுக்கு இறைந்த நீராகவே மாறியுள்ளன.

நிற்க:

நாட்டின் காவலன் என்ற பெரும் கோசத்துடன் பெரும் பிம்பம் உருவாக்கப்பட்டு பதவிக்குக் கொண்டுவரப்பட்டார் கோத்தாபய ராஜபக்ச கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் நடந்த ஈஸ்டர் தினத்துப் பயங்கரவாதத் தாக்குதல் அவரின் வருகைக்கு செங்கம்பளம் விரித்தது. பயங்கரவாதத் தாக்குதலால் அச்சமடைந்திருந்த பெரும்பான்மையின மக்களுக்கு கோத்தாபய ராஜபக்ச மீட்பராகத் தெரிந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒடுக்கியவர் என்ற முற்கற்பிதமும் அதற்கு முக்கிய காரணம்.

மஹிந்த ராஜபக்சவுக்கும், ராஜபக்ச சகோதரர்களுக்கும் தங்கள் ஆட்சியைத் தக்கவைக்க எப்போதும் நாட்டில் பிரச்சினைகள் தேவைப்படுகின்றன. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மௌனித்து விட்டதால், தங்களின் இரண்டாம் ஆட்சிக் காலத்தில் ராஜபக்சவினரால் இந்த யுக்தியைச் செயற்படுத்த முடியவில்லை. அதனால் மீண்டும் ஏதோவொரு விதத்தில் நாட்டில் புதிய பிரச்சினைகளை மூட்டிவிட முனைகின்றனர். அவ்வாறு மூண்டெரியும் தீயில் குளிர்காயும் தங்கள் பழைய வியூகத்துக்கு உயிரூட்டுவதே அவர்களின் முழு நோக்கமும்.

ஏனெனில், பெரும் ஆரவாரத்துடன் அதிகாரத்துக்கு கொண்டுவரப்பட்ட கோத்தாபய ராஜபக்ச மீது அதீத எதிர்பார்ப்புக் கொண்டிருந்த மக்கள் இப்போதுதான் உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர். அதன்விளைவு கோத்தாபயவுக்கு மக்களிடம் இருந்த ஆதரவு சடுதியாகக் குறையத் தொடங்கியுள்ளது. ராஜபக்ச ஆட்சி முறை பற்றி விமர்சனங்கள் எழ ஆரம்பித்திருக்கின்றன. அவை வீரியம் பெறவும் தொடங்கி விட்டன. 'சேர் பெயில்' என்று கிண்டல்கள் பெருகத் தொடங்கியுள்ளன. மைத்திரி ஆட்சிக்கும், கோத்தா ஆட்சிக்கும் வித்தியாசமே இல்லையென்றும், மைத்திரியை விடவும் மோசமான ஜனாதிபதி எனவும் நடுநிலையாளர்களே சொல்லத் தொடங்கிவிட்டனர்.

தங்களுக்கான ஆதரவு குறைந்துவரும் நிலையில், ராஜபக்ச சகோதரர்கள் மீண்டும் தமது யுக்தியை கையில் எடுக்க முனைகின்றனர். தமிழ் மக்களை வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளை வைத்து இப்போது அரசியல் செய்ய முடியாத நிலையில், நாட்டின் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களை வெறுப்பேற்றி பிரச்சினையை உருவாக்க காய்நகர்த்தல்கள் நடக்கின்றன.

நாட்டின் நீதி அமைச்சராக மிகப் பொறுப்புள்ள பதவியில் இருக்கும் அலி சப்ரி, ஜனாஸா தகனம் விடயத்தில், முஸ்லிம்கள் ஆயுதம் தூக்க நேரிடலாம் என்று கூறுகின்றார். ஆனால் தனது சமூகத்தின் பிரச்சினை தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கவோ, தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறேவோ அவர் முற்படவில்லை.

பேஸ்புக் கணக்கில் மாவீரர் நாள் பதிவைப் பகிர்ந்தமைக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் பாய்ந்த அரசு, இந்தக் கருத்தை மௌனமாக வேடிக்கை பார்க்கின்றது. நீதி அமைச்சர் அரசை எச்சரிக்கும் போர்வையில், அரசின் எண்ணப்படி அப்பாவி முஸ்லிம் மக்களை கிளர்ச்சியுறச் செய்கிறாரா என்று ஆராய்வது அவசியமானது.

தங்களின் அரசியல் இலாபத்துக்காக தனி மனித நலனுக்காக நாட்டைப் படுகுழியில் தள்ளும் கைங்கரியத்தை ராஜபக்ச தரப்புகள் மேற்கொள்ளக்கூடும். இப்போது அமைதியாக வெள்ளைத் துணியைக் கட்டி தமது எதிர்ப்பை வெளியிடும் முஸ்லிம்களை இன்னும் வெறுப்பேற்றி உசுப்பேற்றி பிரச்சினைகளை உருவாக்க முயலும் அரசியலை முஸ்லிம் சமூகத்தினர் புரிந்து செயற்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் அனைத்து சிறுபான்மையினரும் ஒற்றுமையாகக் கைகோர்க்க வேண்டும். இல்லாதுவிடில் சிறுபான்மை மக்கள் மீண்டும் குருதிச் சகதிக்குள் வீழ்த்தப்படலாம். ஏனெனில் பேய் அரசாளும் நாடல்லவா?



# கொழும்பு ஆயருடன் பிரதமர் குழு சந்திப்பு

கொழும்பு,டிசெ.19

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர், கொழும்பு ஆயர் துசாந்த ரொட்றிகோ ஆண்டகையை ஆயர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

உற்சவ காலத்தில் கிறிஸ்தவர்களையும், அனைத்து இலங்கையர்களையும் பாதுகாத்து நத்தார் கொண்டாட்டங்களில் ஈடுபடுதல், பாடசாலைகளை ஆரம்பித்தல் மற்றும் புதிய அரசமைப்பு போன்றன தொடர்பில் கொழும்பு ஆயர், பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

கொரோனா நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் துறையினரின் வழிகாட்டல்களைப் பின்பற்றி நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் வகையில் மக்களை விழிப்பூட்டுமாறு பிரதமர், கொழும்பு ஆயரிடம் தெரிவித்தார்.

சந்திப்பில் கொழும்பு அநுநாயக்கர் அருட்தந்தை பெரிப்ரோஹியர், கொழும்பு மறைமாவட்டச் செயலாளர் ராஜன் ஆசீர்வாதம் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் மற்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சட்ட அதிகாரி ரொஹான் எதிரிசிங்க, அருண் கமலத்கே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்று ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# மஹர கலவரம்:

## வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,டிசெ.19

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான வழக்கு விசாரணை, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை வத்தளை நீதிமன்ற நீதவான் புத்திக ஸ்ரீ ராகல முன்பாக நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் உயிரிழந்த 11 கைதிகளில், 4 கைதிகளின் மரண விசாரணை தொடர்பான அறிக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவால், கடந்த தவணை விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில், கைதிகள் நால்வருமே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏனைய 7 கைதிகளின் மரண விசாரணை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்தது.

இருப்பினும் அந்த விசாரணைகள் நிறைவடையவில்லை என்பதை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரியப்படுத்தியுள்ளதை அடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க-இ)

# இந்திய மீனவரின் வருகைக்கு எதிராக கரைதுறைப்பற்று சபையில் தீர்மானம்

முல்லைத்தீவு, டிசெ.19

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அமர்வில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடு தொடர்பில், கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்படையினர், உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும், அத்துமீறிய வருகைக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் சபையில் முன்மொழிந்தார். அந்த முன்மொழிவை சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். தீர்மானம் தொடர்பில் சபை உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும் பதிவு செய்துகொண்டனர்.

சபை அமர்வின் முடிவில், தவிசாளர் தலைமையில் உறுப்பினர்கள் அனைவரும் மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இடத்துக்குச் சென்று தொடர் கவனவீர்ப்பு நடவடிக்கைக்கு தமது ஆதரவை வழங்கினர். (ப-246)

# நீதிமன்றங்களில் 8 லட்சம் வழக்குகள் நிலுவையில்

## விசாரணைகளுக்கு 15 வருடங்கள் தேவை



**கொழும்பு,டிசெ.19**

**நாடளாவிய ரீதியில் உள்ள நீதிமன்றங்களில் சுமார் 8 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.**

இவற்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேலும் 15 வருடங்கள் தேவைப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

வழக்குகளை விசாரணை செய்வதைத் துரிதப்படுத்துவதற்காக, நீதிமன்றங்கள் மற்றும் நீதவான்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, சிறைச்சாலைகளுக்குள் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக சுமார் 8 ஆயிரம் கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதனடிப்படையில், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை ஒரு வருட காலத்துக்கு புனர்வாழ்வளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## கிளி.யில் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

### மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி, டிசெ.19

குளங்களுக்கு தொடர்ந்தும் நீர்வருகை காணப்படுவதாலும், மழையுடனான காலநிலை தொடர்வதாலும் மக்கள் அவதானத்தடன் செயற்படுமாறு கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது.

நேற்றுக் காலை 7 மணியின் வாசிப்பின் பிரகாரம் 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடுக் குளம் 31 அடி 9.5" ஆகவும், 26 அடி கொள்ளளவு கொண்ட கல்மடு குளம் 23 அடி 09" ஆகவும், 25 அடி கொள்ளளவு கொண்ட அக்கராயன் குளம் 23 அடி 09" ஆகவும் உயர்ந்துள்ளது என்று நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஏனைய குளங்களுடைய நீர் மட்டமும் உயர்ந்துள்ளது. எனவே அந்தப் பகுதிகளை அண்மித்துள்ள மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்தவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-6)

## 22 இந்திய மீனவர்களுக்கும் 28 ஆம் திகதி வரை மறியல்

ஊர்காவற்றுறை, டிசெ.19

கடந்த திங்கட்கிழமை இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவுக்கு தெற்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது மூன்று விசைப்படகுகளுடன் 22 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வரும் 25 ஆம் திகதி அந்த மீனவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்ய உத்தரவிட்ட நீதிமன்று அவர்களை தொடர்ந்து அவர்களுடைய படகில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டது.

(ப -25)

## கசிப்பைக் கட்டுப்படுத்தக் கோரி கிளி.கண்ணகிபுரம் மக்கள் மனு

கிளிநொச்சி, டிசெ.19

கண்ணகிபுரம் மேற்கு மக்கள் தமது பிரதேசத்தில் உள்ள கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தக் கோரி கிளிநொச்சி பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்

இரணைமடு சந்தியில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு நேற்றுக் காலை சென்ற குறித்த கிராமத்தின் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் அந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

தமது பிரதேசத்தில் காணப்படும் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தி எதிர்கால சந்ததியின் வாழ்வுக்கு சுமூகமான சூழலை ஏற்படுத்தித் தருமாறு தெரிவித்தே பிரதேச மக்களால் ஒப்பமிடப்பட்டு குறித்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மது உற்பத்தி தொடர்பில் அக்கராயன் பொலிஸாருக்கு தகவல் வழங்குகின்ற போதிலும், அத்தகவல் மீண்டும் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு திரும்புகிறது என அவர்கள் அந்த மனுவில் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மீது தாம் குற்றம் சொல்லவில்லை என்றும், ஆனாலும் அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தமக்கு பொலிஸாரின் துணை இருப்பது போன்று காண்பித்துக்கொள்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-35)

### புரேவி எதிரொலி


## மன்னார் மீனவர்களுக்கு ரூ.330 மில்லியன் இழப்பு

மன்னார்,டிசெ.19

அண்மையில் ஏற்பட்ட புரேவிப் புயலால், மன்னார் மாவட்ட மீனவர்களது, 330 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அழிந்துள்ளன என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

புரேவிப் புயலால் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக மீனவர்கள் தெரிவிக்கையில், ஒரு நாள் படகு 59, சிறிய படகு 315, வள்ளம் 103, வலைகள் ஆயிரத்து 215, மரத்தடி 12 ஆயிரம், தற்காலிக வாடி 142, நிரந்தர வாடி 154, வெளிகள இயந்திரம் 112 ஆகியன பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இதனால் 330 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் அழிந்துள்ளது. என்றனர். (க-60)

## வவுனியா நிலைமைகள்: அதிகாரிகள் கூடி ஆராய்வு



வவுனியா,டிசெ.19

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக, அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமாரின் நெறிப்படுத்தலில், இணைத்தலைவர்களான வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்ட சந்தைகளின் நிலைமை, கொவிட்19 பாதுகாப்பு நடவடிக்கைகள், காலநிலை மாற்றம், வருட இறுதிக் கொண்டாட்டங்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புத் தரப்பினர், சுகாதாரப்பிரிவினர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(க-18,110)

## விடுதி நடத்திய முதியவருக்கு ஆள்பிணை

விபச்சார விடுதி நடத்திய குற்றச்சாட்டில் விக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முதியவரை ஆள்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் எழுதுமட்டுவாள் கரம்பகம் பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தியபோது, அங்கிருந்த இரு பெண்களையும் வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதன் பின்னர் இரு பெண்களுக்கும் பிணை வழங்கப்பட்டு, முதியவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முதியவரை 5 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (ஐ-9)

## இலங்கை மத்திய வங்கிக்கு பிரதி ஆளுநர்கள் நியமனம்

கொழும்பு,டிசெ.19

இலங்கை மத்திய வங்கிக்கு பிரதி ஆளுநர்கள் இருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியில் உதவி ஆளுநர்களாக செயற்பட்ட யிவட் பெர்னாண்டோ மற்றும் தம்மிக்க நாணயக்கார ஆகியோர் புதிய பிரதி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யிவட் பெர்னாண்டோ 30 வருடங்களுக்கு மேலாக இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றியவராவார். இந்தக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளராகவும், அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளார். வங்கி மேற்பார்வை, வர்த்தக நிதி, அந்நிய செலாவணி, ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட திணைக்களங்களின் உதவி ஆளுநராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரதி ஆளுநராக புதிதாக நியமனம் பெற்றுள்ள தம்மிக்க நாணயக்கார இலங்கை மத்திய வங்கியில் 27 வருடங்கள் சேவை அனுபவமுள்ள ஒருவராவார்.

இதற்கு முன்னர் அரச கடன், பிரதேச அபிவிருத்தி, அலுவலக சேவை முகாமைத்துவம் உள்ளிட்ட திணைக்களங்களின் உதவி ஆளுநராகவும் செயற்பட்டுள்ளார். (சு-இ)



## இரு வெடிபொருள்கள் தருமபுரத்தில் மீட்பு

கிளிநொச்சி, டிசெ.19

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுக் குளம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியருகில் இருவேறு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் இனங்காணப்பட்டு தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நீதிமன்றின் அனுமதியுடன் மீட்கப்பட்ட அந்த வெடிபொருள்களை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-113)

## உயர் நீதிமன்ற தீ விபத்து: அறிக்கை நீதிமன்றுக்கு

கொழும்பு,டிசெ.19

கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற தீ அனர்த்தம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள வாழைத்தோட்டம் பொலிஸார், கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

தீ அனர்த்தம் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தீ அனர்த்தம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுவருவதையும் வாழைத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

கொழும்பு புதுக்கடையில் உள்ள உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் திடீர் தீ அனர்த்தம் ஏற்பட்டது. அதனையடுத்து கொழும்பு மாநகர சபை தீயணைப்பு படையினர், இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகள் அங்கு சென்று பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (சு-இ)

## மன்.பெரிய குஞ்சுக்குளத்திலும் வனத் திணைக்களம் அடாத்து

### காணிகளை பிடித்துள்ளனர் என மக்கள் குற்றச்சாட்டு

**மன்னார், டிசெ.19**

**மன்னார் பெரிய குஞ்சுக்குளம் கிராமத்து மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் அடாத்தாக கபளீகரம் செய்துள்ளது என்று மன்னார் பெரிய குஞ்சுக்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

நாங்கள் இக் கிராமத்தின் பூர்வீகக் குடிகள். பரம்பரை பரம்பரையாக இக் கிராமத்தில் வசித்து வருகிறோம் எமது மக்கள் ஆரம்பத்தில் சேனைப் பயிர்ச் செய்கை, வேட்டையாடுதல், தேன் எடுத்தல், விவசாயம் போன்ற தொழில்களைச் செய்து வந்தவர்கள்.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்ததோடு பல குடும்பங்கள் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்து சென்றன. 2000 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தில் எமது கிராமங்களுக்கு திரும்பிய போது கிராமங்கள் காடுகளாகவும் சிறு பற்றைகள் வளர்ந்தும் காணப்பட்டன. இதனை சாட்டாக வைத்து இலங்கைவனவளத்திணைக்களத்தினர் பொதுமக்களின் காணிகள் பலவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்று எல்லைக்கற்கள் இட்டுள்ளதோடு முட்கம்பி வேலியமைத்து எமது காணிகளை கபளீகரம் செய்துள்ளனர்.

எங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணி ஆவணங்களான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் உறுதிகள் உள்ளன இருப்பினும் வனவளத் திணைக்களம் நாம் எமது காணிகளுக்குள் செல்வதைத் தடை செய்து வருகிறது. குஞ்சுக்குளம் பகுதியில் 50 வீதமான காணிகள் அடாத்தாக அபகரிக்கப்பட்டுள்ளன - என்றனர். (ப- 213)

குமரபுரத்தில்

## மக்களுக்கு இடையூறான வெள்ளம் வெளியேற்றம்



கிளிநொச்சி, டிசெ.19

கிளிநொச்சி- பரந்தன், குமரபுரம் 2ஆம் ஒழுங்கையிலும் குடியிருப்புகளிலும் தேங்கி மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்திய வெள்ளம் வெளியேற்றப்பட்டுள்ளது.

பரந்தன் - பூநகரி வீதியிலும், குமரபுரம்-காஞ்சிபுரம் வீதியிலும் அமைக்கப்பட்ட பாலங்களால் 40 ஏக்கர் வயல் வெளிகளால் வெளியேறும் வெள்ளம், கடந்த மழையின்போது வெளியேற முடியாது இருந்ததை அடுத்து அது தொடர்பில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதனையடுத்து தவிசாளரது உடனடி நடவடிக்கை மூலம் வெள்ளம் வழிந்தோடுவதற்கான வடிகால்கள் தூர்வாரப்பட்டு வெள்ளம் வெளியேற்றப்பட்டது.

வெள்ள வடிகால்களை அடைக்கும் விதமாகச் செயற்படும் குடியிருப்பாளர்கள், இனிவரும் காலங்களில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமல் தமது வாயிற் கதவுகளுக்கு முன்னால் வெள்ளம் தேங்காதவாறு நீர்க்குழாய்களையோ அல்லது கொங்கிறீட் பலகைகளையோ பாவித்து ஒத்துழைப்பு வழங்குமாறு தவிசாளர் கேட்டுக்கொள்கின்றார். (ப-222)

## காயமடைந்த மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி டிசெ. 19

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல்களுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிளாலி, கெற்பேலி மற்றும் சாவகச்சேரி பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப-9)



## மன்னாரில் மருத்துவர், தாதியர் பற்றாக்குறை விரைவில் நீங்கும்

மன்னார் மாவட்டத்தில் நிலவிவரும் மருத்துவர் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறைகளை விரைவில் தீர்ப்பதற்கான நிலைமை உருவாகியுள்ளது என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரண்டு முறை கிடைக்கின்ற நியமனங்களில் வடமாகாணத்துக்கு தேவையான மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள மருத்துவ அதிகாரிகளின் பற்றாக்குறை நீங்க வாய்ப்பு ஏற்படும் நிலை காணப்படுகின்றது. அத்துடன் தாதியர் பற்றாக்குறைகளையும் நீக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். மேலும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரண்டு மருத்துவமனைகளின் கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன - என்றார். (ப-60)

## பொலிஸாருக்கு எதிராக 2,400 முறைப்பாடுகள்

கொழும்பு,டிசெ.19

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில், பொலிஸாருக்கு எதிராக 2 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 51 வீதமான குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்காமை மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை தொடர்பில் பெருமளவிலான குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளன.

இதுவரை விசாரணை நடத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு, பொலிஸ்மா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தில் தொடர்ந்தும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும்.

முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்வதற்காக திட்டமொன்று வகுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

# போதைப்பொருள் கடத்தல் கொத்தணிக்கு காரணமா?

யாழ்ப்பாணம், டிசெம்பர் 19

மருதனார்மடம் சந்தையில் கொரோனா கொத்தணி கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பில் இருந்து வந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களாலேயே கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கப் பொலிஸார் திட்டமிட்டு ள்ள போதும், தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெறும் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், விசாரணைகள் தாமதமாகின்றன என்று அறிய முடிகின்றது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் சந்தியில் உள்ள முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் கடந்த 9ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் 38 வயதுடைய ஒருவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்பவர். தம்புள்ளைக்குச் சென்று மரக்கறி கொள்வனவு செய்பவர் என்பதால், கொரோனா தொற்றுக்கு அது காரணமாக இருக்கலாம் என்று நம்பப்பட்டது.

ஆனால் அண்மைய நாள்களில் போதைப் பொருள் கடந்தல் சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தக் கொரோனா கொத்தணிக்கு போதைப் பொருள் கடத்தல் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு தெல்லிப்பழையில் பெண் ஒருவர் ஹெரோய்ன் விற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில், கொழும்பில் இருந்து வந்து ஹெரோய்ன் வழங்கும் ஒருவர் நெல்லியடியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடியில் வைத்துக் கைது செய்யப்பட்டவர் கொழும்பு, ஆமர் வீதியைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதி. இவர் அங்கிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்து மருதனார்மடம் சந்தியில் இறங்கி, கட்டுவனில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவ்வாறு செல்வதற்கு மருதனார்மடம் சந்தியில் உள்ள முச்சக்கர வண்டிகளையே அவர் பயன்படுத்தியுள்ளார். பஸ்ஸில் வந்திறங்கும் சமயம் அங்கு எந்த முச்சக்கர வண்டி உள்ளதோ, அந்த முச்சக்கர வண்டியில் அவர் வீடு சென்றுள்ளார். அவ்வாறு முச்சக்கர வண்டி இல்லாத சமயம், தெல்லிப்பழை பெண் ஏழாலை முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொடுப்பார் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த நபர் போதைப்பொருள் வர்த்தகத்துக்காக அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதனால் மருதனார்மடம் கொரோனா கொத்தணி உருவாகியிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மருதனார்மடம் கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய சிலரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளபோதும், அவர்கள் தற்போது சிகிச்சையில் உள்ளதால் விசாரணைகள் தாமதமாகின்றன என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவருக்கும் இன்று பி.சி. ஆர். பரிசோதனை மேற்கோள்ளப்படவுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-5)

# மாறிமாறி வந்த அறிவிப்புக்களால் கிளி. சந்தை வர்த்தகர்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ.19

**பொதுச் சந்தையைப் பூட்டுவது தொடர்பாக மாறிமாறிக் கிடைத்த அறிவிப்புக்களால் நேற்று கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.**



நேற்றுக் காலை மரக்கறி மற்றும் மீன் சந்தைகளைப் பூட்டுமாறும், ஏனைய வர்த்தக நிலையங்கள் வழமைபோன்று இயங்கும் எனவும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஏனைய வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

சில மணிநேரங்கள் அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டுமாறு கரைச்சி பிரதேச சபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். மாறி மாறி கிடைத்த அறிவித்தல்களால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்ட சந்தை வர்த்தகர்கள் முழுமையாக வர்த்தக செயற்பாடுகளிலிருந்து வெளியேறினர்.

எனினும் மரக்கறி, மீன் உள்ளிட்டவை வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்பட்டன. சந்தையின் உட்பகுதியில் உள்ள பல்பொருள் வாணிபம், ஆடைகள் விற்பனை நிலையம் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சந்தை வளாகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வர்த்தகச் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெற்றுவரும் நிலையில் குறித்த வர்த்தகர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-6)

# கட்டி நின்ற பசுவை கொன்று இறைச்சி

## மக்கள் விசனம்



முல்லைத்தீவு, டிசெ. 19

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் காணியில் கட்டி வைக்கப்பட்ட பசு மாடு ஒன்று வெட்டப்பட்டு, இறைச்சியாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அப்பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அண்மை நாள்களாக முள்ளிவளை பிரதேசத்தில் கால்நடைகளைக் களவாக வெட்டிக் கொண்டு செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இன்நிலையிலேயே கடந்த புதன்கிழமை கேப்பாபிலவு பகுதியில் சொந்தக் காணியில் கட்டிவைக்கப்பட்ட மாட்டை கட்டிய கயிற்றைக் கூட கழற்றாது, கொலைசெய்து இரண்டு பின்னங்கால்களையும் இறைச்சிக்காகத் திருடியுள்ளனர். சம்பவம் குறித்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் மாட்டின் உரிமையாளர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-19)

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் இணுவில் துரை வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்ப பெண் தவறான முடிவெடுத்து நேற்றிரவு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாவடியில் உள்ள மருந்தகம் ஒன்றின் உரிமையாளரான அந்தப் பெண் நேற்றிரவு தூக்கில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டு ள்ளார். இறப்புக்கான காரணம் தெரியவரவில்லை. சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-ரி4)

# மாணவர்களுக்கு கற்றல் உதவிகள்

கொடிகாமம்,டிசெ.19

பெற்றோரை இழந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய தென்மராட்சி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு "கல்விக்கு கை கொடுப்போம்" திட்டத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழி பணிமனையில் நடைபெறவுள்ளது.

அறவழி போராட்டக்குழு, தென்மராட்சி சேவை நிறுவனத்துடன் (கனடா) இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.உஷா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-159)

# நோயாளரின் தொலைபேசிகள் இரவு வேளைகளில் திருட்டு

சாவ. மருத்துவமனை விடுதியில் இந்த நிலை

சாவகச்சேரி, டிசெ.19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் அலைபேசிகள் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் திருடப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு தினங்களில் பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி போன்றவற்றிலும் அண்மையில் குருதி சுத்திகரிப்பு விடுதியிலும் அலைபேசிகள் திருட்டுப் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவு பகலாக கடமையில் உள்ள நிலையில் இனந்தெரியாதவர்கள் விடுதிகளில் புகுந்து அலைபேசிகளைத் திருடிவருவதுகுறித்து நோயாளர்களும் உறவினர்களும் கவலை தெரிவித்தனர். (ப-9)

# மன்னார் தீடைகளில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்குக

*மீனவர்கள் கோரிக்கை*

**மன்னார், டிசெ.19**

**தலைமன்னார் தீடைப் பகுதியில் பரம்பரையாக ஏழு தீடைகளில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவர்களுக்கு தற்பொழுது தடை விதிக்கப்பட்டுள்ளதால் இவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆகவே மூன்று தீடைகளிலாவது மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.**

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மீனவர்களால் இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

தீடைப்பகுதியில் இப் பகுதி மீனவர்கள் இன்று நேற்று மீன்பிடிக்கவில்லை. மாறாக நூற்றாண்டு காலமாக இதில் தொழில் செய்து வருகின்றனர். இத் தீடைப் பகுதியில் புல்லுக்குருவி என அழைக்கப்படும் ஒரு இனப் பறவை முட்டையிடுகிறது என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது. இவ் இனப் பறவைகள் நாள் முழுதாக அல்லது மாதம் முழுதாக முட்டையிடுவதில்லை. மாறாக அவைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே முட்டையிடுகின்றன. தீடைப் பகுதியில் அடசு வலை எனும் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த நாம் இந்தத் தடையால் பாதிக்கப்பட்டு எமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம் எனவே அந்த தடையை நீக்க வேண்டும் என்றனர்.

மீனவர்களுக்கான தடையை நீக்குவது தொடர்பில் கடற்படையினரின் ஆட்சேபனை இல்லாத போதும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் இதற்கான தடை விதிக்கப்பட்டுள்ள தால் அமைச்சர் மட்டத்தில் அந்தப் பிரச்சினை யைக் கொண்டு செல்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ப-60)

## காணி பிரச்சினைகளுக்காக விசேட நியாயாதிக்க சபை

கொழும்பு,டிசெ.19

காணி மற்றும் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு விசேட நியாயாதிக்க சபையை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் , ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் நியாயாதிக்க சபையின் உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை, எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்த விசேட நியாயாதிக்க சபை ஸ்தாபிக்கப்படவுள்ளது.

தற்போது மாதாந்தம் நான்கு தினங்களுக்கு மாத்திரம் நியாயாதிக்க சபை கூடுகிறது. அதனை 6 நாள்களாக அதிகரிக்க நீதி அமைச்சுடனான கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வருடமொன்றில் சுமார் ஒரு இலட்சம் முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

காணி மற்றும் நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு நியாயாதிக்க சபையில் தீர்வு காணப்படுவதால், நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகளின் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(க-இ)

## மயிலத்தமடு காணி: வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,டிசெ.19

மட்டக்களப்பு மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை காணி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.அப்துல்லா முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி வரை நீதிபதி ஒத்திவைத்தார்.

மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களால் கடந்த 10 ஆம் திகதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மகாவலி அதிகாரிகள் சமூகமளிக்காமை மற்றும் பிரதிவாதிகள் கால அவகாசம் கோரியமை உள்ளிட்ட காரணங்களால் மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியேறியுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ள இரண்டு பிரதிவாதிகளுக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.(க-இ)



## நான்காவது நாளாகவும் மீனவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு,டிசெ.19

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று நான்காவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தில் உப்புமாவெளி மீனவர் சங்கம் மற்றும், முல்லைத்தீவு மாவட்ட சம்மாட்டிமார் சங்கம் என்பன இணைந்துள்ளன. அத்துடன் மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக சட்டத்தரணி சின்னராசா தனஞ்சயனும் பங்குபற்றினார்.

மீனவர்களுக்கு சட்ட ரீதியான உதவிகளை வழங்குவதற்கு அவர் ஆதரவு தெரிவித்தார்.

போராட்டத்தில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனும் இணைந்துள்ளார். (க-246)

## கடவுள் இல்லாததனாலேயே கொவிட் – 19 தாக்குகிறதாம்

*ஓமல்பே சோபித தேரர் கண்டுபிடிப்பு*

கொழும்பு, டிசெ.19

கடவுள் இல்லை, கடவுள் இருந்தால் கொவிட் 19 என்ற அனர்த்தம் ஏற்படுமா? என்று தேசிய புத்திஜீவிகள் சங்கத்தின் உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடவுளோ அல்லது பேயோ இருந்திருந்தால் கொவிட்டால் மனித குலம் எதிர்நோக்கியுள்ள அழிவிலிருந்து அவைகளால் எம்மை மீட்டிருக்க முடியும். காளி அம்மா, கதிர்காமக்கடவுள், விஷ்ணு, பத்தினி அம்மா உள்ளிட்ட கடவுளர் இருந்திருந்தால் கொவிட்டினால் இவ்வளவு பெரும் அழிவு ஏற்பட்டிருக்காது. என்றார்.(ஐ-இ)

## கைவிடப்பட்ட சிறுமி பொலிஸாரால் மீட்பு

கொழும்பு,டிசெ.19

மடுல்சிமை பகுதியில் குடிசையொன்றில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சிறுமியொருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

பெற்றோர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, 3 வயதுச் சிறுமி குடிசையில் கைவிடப்பட்டுள்ளார். சிறுமியை மீட்ட பொலிஸார் அவரை நீராட்டி, உணவு, உடைகள் வழங்கிய நிலையில் பதுளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து, சிறுமி நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சிறுமியை அவருடைய தாய் காட்டுப்பகுதியில் கைவிட்டுள்ளார். அவர் மீது முதற்கட்டமாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## பஸ் சேவையை இலகுபடுத்த கோரிக்கை


அச்சுவேலி டிசெ.19

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து காலை 6 மணியளவில் புறப்பட்டு அச்சுவேலி கைதடி வழியாக கிளிநொச்சி நோக்கி செல்லும் பஸ்ஸை, மாலையில் கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டு அதே வழியாக பருத்தித்துறை நோக்கிச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் குறித்த பஸ்ஸில் காலையில் பயணம் செய்யும் அரசாங்க ஊழியர்கள் 36 பேர் கையொப்பமிட்டு கிளிநொச்சி சாலை முகாமையாளரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் உள்ளதாவது;

அரசாங்க உத்தியோகத்தராகிய நாம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு கடமையின் நிமித்தம் சென்று திரும்பும்போது பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பருத்தித்துறையில் இருந்து காலை 6 மணியளவில் புறப்படும் பஸ் அச்சுவேலி ஊடாக கோப்பாய் கைதடி வழியாக அறிவியல் நகரைச் சென்றடைகின்றது. காலையில் மட்டும் நடைபெறும் இந்தச் சேவையை மாலை 4.15 மணியளவில் அதே வழியூடாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ஐ-11)




ஜனாஸாக்கள் எரிப்பதை எதிர்த்து கல்குடா , முஸ்லிம் மக்களின் ஏற்பாட்டில் வாழைச்சேனை பிரதேசத்தில் நேற்று வெள்ளைத்துணியை கட்டும் அமைதியான அடையாள எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

ஜனாஸாக்கள் எரிப்பதை எதிர்த்து நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தின் ஓர் அங்கமாகவே அந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

வாழைச்சேனை முஹைதீன் ஜும்மா பள்ளிவாயலின் நுழைவாயிலில் பிரதேசத்திலுள்ள அமைப்பின் பிரதிநிதிகள், சிறுவர்கள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு வெள்ளைத் துணியை கட்டி தங்களது **எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.** (ப)

# தமிழ்க் கட்சிகள் ஒன்றானால் சுய நிர்ணயம் கிடைக்குமா?

## செட்டிகுளம் முன்னாள் தவிசாளர் கேள்வி

**வவுனியா,டிசெ.19**

**செட்டிகுளம் பிரதேசசபையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவதால் எமக்கு சுயநிர்ணயம் மற்றும் தேசியம் கிடைக்குமா என்று வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆ.அந்தோணி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ். மாநகர சபையின் வரவு - செலவுதிட்டத்தை ஈ.பி.டி.பி., தமிழ் காங்கிரஸ் ஆகிய இரண்டும் இணைந்து தோற்கடித்துள்ளன. ஆனால் செட்டிகுளம் பிரதேசசபையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவதால் எமக்கு சுயநிர்ணயம் மற்றும் தேசியம் கிடைக்குமா என்ற கேள்வி எழுகிறது. மாகாணசபைத் தேர்தலை மையமாக வைத்தே இந்த நாடகத்தை இவர்கள் நடத்துகிறார்கள். கோத்தாவுக்கு எதிராகவே தான் வாக்களித்தேன் என முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சொல்கிறார். நாடாளுமன்றத்திலே வரவு-செலவுத்திட்டத்துக்கு அவர்களது கட்சி ஆதரவளித்து உள்ளது. மக்கள் இதனை உணர்ந்துகொள்ள வேண்டும். தமது கதிரைகளுக்காகவே தமிழ்க் கட்சிகள் சண்டையிடுகின்றன. மக்களின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அபிவிருத்திகளைச் செய்வதை சீர்குலைக்கும் விதமாகவே தமிழ்க்கட்சிகள் இந்த ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றன - என்றார். (ஐ-110)

# ரஞ்சனின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.19

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அடுத்த மாதம் வரை உயர் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த குற்றச்சாட்டு தொடர்பான பரஸ்பர விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான திகதியை குறிப்பிட்டு, வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதன்படி இந்த வழக்கு 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி, மீள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ப)




# மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது குடிதண்ணீர்க் கிணறு

ஊர்காவற்றுறை, டிசெ.19

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பொன் கிழக்கு காளிகோவிலடி புதிய வீட்டுத்திட்டம் என்னும் இடத்தில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் அமைக்கப்பட்ட பொதுக் குடிதண்ணீர் கிணறு பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறக்கப்பட்டது.

தீவக மக்கள் வருடாந்தம் கோடை காலத்தில் எதிர்நோக்கி வருகின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப-20)

# சபை உறுப்பினருக்கு கொரோனாத் தொற்று



சிலாபம்,டிசெ.19

சிலாபம் வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் நிதி மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-இ)

*13 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்;*

# 50 வயது நபருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை

திருமலை, டிசெ.19

திருகோணமலை - கிண்ணியா பகுதியில் 13 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் குற்றவாளி தேடப்பட்டு வந்த நிலையில், கல்முனை கடற்கரையில் தலைமறைவாகியிருந்தபோது நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் குற்றவாளிக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 12 இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதி, அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 7 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

கிண்ணியாவில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி 13 வயதான சிறுமி 50 வயது நபரால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தபோது பிரதிவாதி தலைமறைவாகினார்.

எனினும், பிரதிவாதியின்றி வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட 13 வயதுச் சிறுமி குழந்தை பிரசவித்துள்ளதுடன், மேற்கொள்ளப் பட்ட மரபணு பரிசோதனையில் பிரதிவாதியே குழந்தையின் தந்தை என உறுதி செய்யப்பட்டது. (ப)



# சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

வவுனியா,டிசெ.19

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் நேற்று வவுனியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் கருமாரி அம்மன் ஆலய பிரதம குரு பிரபாகரக்குருக்கள் விசேட வழிபாடுகளை நடத்தியிருந்தார்.

இதன்போது அண்மையில் வவுனியாவில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்கு செல்லும்போது கடலில் மூழ்கி பலியான இரு இளைஞர்களது ஆத்மசாந்தி வேண்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-110)



# வாகன நெரிசலை குறைக்கும் செயற்பாடு முன்னெடுப்பு

மட்டக்களப்பு,டிசெ.19

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய வாகன போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் நாட்டில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கொழும்பு மாவட்டத்துக்கு மண் கொண்டு செல்லும் கனரக வாகனங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் புகையிரதத்தின் ஊடாக மண் கொண்டு செல்லும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-150)

# வறுமையிலுள்ள மாணவர்களுக்கு ரூபா.10 லட்சத்தில் உபகரணங்கள்

## வலி. தென்மேற்கு சபை நடவடிக்கை

வலி. தென்மேற்கு, டிசெ.19

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ள பிரதேச சபை 10 லட்சம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்களை வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

வளமான எதிர்கால சந்ததியினருக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. தற்போது இந்த நிதியின் மூலம் வலி. தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள 40 பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்களின் சிபாரிசின் அடிப்படையில் கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதேபோல் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-115)

# பிரதான வீதி சேதமடைந்ததால் விவசாய நடவடிக்கை பாதிப்பு

*அக்கராயன் விவசாயிகள் சுட்டிக்காட்டு*

கிளிநொச்சி - அக்கராயன் குளத்தின் கீழான முக்கிய வீதியொன்று சேதமடைந்து காணப்படுவதால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது பெரும் பாதிப்புகளை விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர் என்று அக்கராயன், ஸ்கந்தபுரம், நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கராயன் மருத்துவமனை சந்தியில் இருந்து ஸ்கந்தபுரம் வயல் வெளி வரையான வீதி மத்திய அமைச்சால் சீரமைக்கப்பட்டது.

குறித்த வீதி சீரமைக்கப்பட்டு இரு ஆண்டுகளில், மக்கள் போக்குவரத்து செய்ய முடியாமல் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வயல் நிலங்களில் இருந்து வீடுகளுக்கு எடுத்து வருவதிலும் பசளை போன்றவற்றை வயல் நிலங்களுக்கு கொண்டு செல்வதிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ-ரி2)

# எம்.சி.சி. உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடாது

## அமைச்சர் மகிந்த அமரவீர உறுதி



கொழும்பு, டிசெ. 19

அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கை வேறு பெயரில் வந்தால்கூட அதில் இலங்கை கைச்சாத்திடாது. நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களை மட்டுமே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் செயற்படுத்தும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எம்.சி.சி. உடன்படிக்கை இனி கைச்சாத்திடப்படாது. அதிலிருந்து அமெரிக்காவும் விலகிவிட்டது. எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது எனக்கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அந்தக் கொள்கை தொடர்ந்தும் பின்பற்றப்படும். வேறு வடிவில், வேறு பெயரில் வந்தால் கூட ஏற்பதற்குத் தயாரில்லை. அமெரிக்காவுடனான எமது இராஜதந்திர உறவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அது அவ்வாறே தொடரும். அமெரிக்காவும் இதனை அறிவித்துள்ளது. நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்களை மாத்திரமே இந்த அரசாங்கம் செய்யும். தீங்கு விளைவிக்கக் கூடிய எதனையும் செய்யாது. அதேவேளை, கொரோனா வைரஸ் முழு உலகுக்கும் சவாலாக அமைந்துள்ளது. நாம் முதல் அலையைக் கட்டுப்படுத்தினோம். 3ஆவது அலையையும் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ப)

## அலைவரிசை கோபுரத்தால் ஓமந்தையில் மக்கள் அச்சம்



வவுனியா,டிசெ.19

வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு கோபுரத்தால் அப்பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் உள்ள பொது விளையாட்டு மைதான வளவில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றால் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. குறித்த கோபுரம் 4ஜி (நான்காம் தலைமுறை) அலைவரிசைக்கானது என்று அந்தப் பணியில் ஈடுபட்டுவரும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் 5ஜி (ஐந்தாம் தலைமுறை) தொழில்நுட்ப அலைவரிசைக் கோபுரம் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தே குறித்த நிறுவனம் அன்று இருந்த கிராமத்தினுடைய கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கடந்த வருடம் அனுமதி பெற்றுள்ளது. கிராம அபிவிருத்தி சங்கமும் மக்களுடன் கலந்துரையாடாமல் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கோபுரத்தால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-110)

### புற்றுநோய் விடுதியில்

## நான்கு நோயாளர்களுக்கு கொரோனாத் தொற்று



காலி,டிசெ.19

காலி கராபிட்டி மருத்துவமனையின் புற்றுநோய் விடுதியில் நான்கு நோயாளர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் மூன்று பேர் பெண்கள் என்று காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நோயாளி ஒருவருடன் தங்கியிருந்த அவரது மனைவிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அதனையடுத்து விடுதியில் உள்ள அனைத்து நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 4 நோயாளிகளுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ஐ-இ)



## அனைவருக்கும் சமமான கல்வியை வழங்கவேண்டும்

### திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருமலை, டிசெ.19

அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது

இந்த ஆர்ப்பாட்டத்தை தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்தது. தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் கேம சந்திர தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்த கொரோனா அனர்த்த சூழ்நிலையில் ஒன்லைன் மூலமான கல்வியை வழங்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையால், கிராமப் புற மாணவர்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அனைத்து மாணவர்களும் சமமான கல்வியை பெற வசதி செய்யப்பட வேண்டும் என்ற கோஷசங்கள் முன்வைக்கப்பட்டன. (ப)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு மருந்து

சாவகச்சேரி, டிசெ.19

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்துகள் நாளைமறுதினம் தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன.

எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் நாளைமறுதினம் ஆரம்பித்து கொடிகாமம், மந்துவில், வரணி, மட்டுவில், சாவகச்சேரி கைதடி ஆகிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளன. இப்பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படும் நிலையங்கள் முதல் நாள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும், அறிவிக்கப்படும் நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு சென்று தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ப-9)

## ஜனாஸாக்களை மாலைதீவுக்கு அனுப்ப முஸ்லிம்கள் தயாரில்லை!

### முஜிபூர் ரஹ்மான் எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 19

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை மாலைதீவில் அடக்கம்செய்யும் முயற்சிக்கு ஒருபோதும் உடன்பட முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; நாம் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர்கள். நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்துள்ளோம். வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின்போது மன்னர்களுடன் இணைந்து அதற்கு எதிராக சமராடியுள்ளோம். புலிகளுக்கு எதிரான போரின்போதும் நாட்டின் பக்கம் நின்றோம். இந்த மண்ணில் நாமும் உதிரம் சிந்தியுள்ளதால் 'ஜனாஸாக்களை' மாலைதீவு கொண்டுசெல்வதற்கு உடன்படமுடியாது. மாலைதீவிடம் இவ்வாறானதொரு கோரிக்கையை விடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு யார் ஆலோசனை வழங்கினார்கள் எனத் தெரியவில்லை. வெளிநாடொன்றிடம் இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைப்பதையிட்டு இலங்கையர்களாக வெட்கப்படவேண்டும் - என்றார். (ப-44)

# சூம் கற்கையில் 20 நிமிடங்களுக்கு ஒரு முறை ஓய்வு எடுக்கவேண்டும்

### கண் மருத்துவ நிபுணர் பிரியங்க தெரிவிப்பு

மாத்தறை, டிசெ.19

இணையம் மூலமாக கற்றலில் ஈடுபட்டுள்ளவர்கள் 20 நிமிடங்களுக்கு ஒருதடவை ஓய்வெடுக்க வேண்டும் என்று மாத்தறை மாவட்ட மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணரான பிரியங்க தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் தினமும் 20 தொடக்கம் 30 பாடசாலை மாணவர்கள் தலைச் சுற்று மற்றும் கண் வலி போன்ற அறிகுறிகளால் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். கொரோனாத் தொற்று அச்சுறுத்தலால் தற்போது பல பகுதிகளிலும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனினும் கல்விச் செயற்பாடுகள் இணையவழி ஊடாகத் தொடர்கின்றன.

இந்த நிலையில் தொடர்ச்சியாக கைத்தொலைபேசி அல்லது கணினிகளைப் பார்த்து கற்றுவருவதால் 20 தொடக்கம் 30 மாணவர்கள் வரை தினமும் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர் என்று மாத்தறை மாவட்ட மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணரான பிரியங்க தெரிவித்தார். இவர்களுக்கு குறிப்பாக வாந்தி, கண்வலி, தலைச் சுற்று, கண்களில் தானாகவே கண்ணீர் வருதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார். அவர்கள் அனைவரும் ஒன்லைன் ஊடாக கற்றுவருபவர்கள் என்பது குறிப்பி டத்தக்கது. ஆகவே இவ்வாறு இணையமூடாக கற்றலில் ஈடுபட்டுள்ளவர்கள் 20 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஓய்வெடுக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார். (ப)

# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள் ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட் சத்தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

மிதுன ராசிக்கு வருகின்ற 2021 ஆம் ஆண்டின் குரு பெயர்ச்சிக்கு பிறகு குரு பகவான் 9ஆம் வீட்டில் அமர்ந்திருப்பார். சனிபகவான் எட்டாவது வீட்டிலும், ராகுகேது ஆறு மற்றும் இரண்டாவது வீட்டிலும் அமர்ந்திருப்பார்கள். செவ்வாய் பகவான் நான்காவது வீட்டில் இருந்து ஆண்டின் இறுதியில் ஐந்தாவது வீட்டுக்கு பெயர்ச்சி ஆகிறார். இவ்வாறு இருக்கும் கிரக நிலையில் மிதுன ராசிக் காரர்கள் நிறையவே ஏற்ற இறக்கங்களை சந்திப்பார்கள்.

**குடும்பம்:** குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை மிதுன ராசிக்காரர்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கப் பெறும். உற்றார், உறவினர்களின் ஆதரவு சிறப்பாக அமைய இருக்கிறது. இதுவரை பிரிந்து இருந்த குடும் பங்கள்கூட ஒன்று சேர்வதற்கான அற்புதமான வாய்ப் பாக இருக்கும். எதிர்பாராத நல்ல நிகழ் வுகள் எல்லாம் 2021 ஆம் ஆண்டில் நிச்சயம் நடைபெறும். தடைப்பட்டுக் கொண்டிருந்த திருமண யோகங்களும் கைகூடி வரும். காதல் வாழ்க் கையில் இருப்பவர்களும் திருமண பந்தத்தில் இணை வார்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த ஒற்றுமைக் குறைவு தளர்வதற்கு சந்தர்ப்பங்கள் அமையும்.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியா பாரத்தில் உங்களுடைய கடினமான உழைப்பே வெற் றிக்கு காரணமாக அமையப் போகின்றது. நீங்கள் எந்த அளவுக்கு உங்களுடைய உழைப்பை மூலதன மாக போடுகிறீர்களோ! அதே அளவுக்கு வெற்றியும் நிச்சயமாக கிடைக்கப் போகிறது. வெற்றியை நோக் கிய பயணத்தில் இருக்கும் மிதுன ராசிக்காரர்கள் சோர்வடையாமல் வீர நடை போடுவது நன்மைகளை கொடுக்கும். பொருளாதாரத்தில் இருக்கும் ஏற்ற இறக் கங்களை சீர் செய்ய புதிய யுத்திகளை கையாள்வது முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தில் இருக்கும் மிதுன ராசிக்காரர்கள் ஏழாவது வீட்டில் அமரும் புத பகவா னால் சாதகமான பலன்களைப் பெறுவீர்கள். ஆண் டின் தொடக்கத்தில் நீங்கள் நிறைய பிரச்சினைகளை சந்திப்பீர்கள். ஆனால் இறுதியில் உங்களுக்கு அனு கூலமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் ஏற்றத்தை பெறலாம். உங்களுடைய திறமையை நிரூபிக்க வேண்டிய கால மாக அமையப் போகிறது. முன்கோபத்தைத் தவிர்த்து, சாதுரியமாக செயல்பட்டால் வெற்றி உங்களுக்குத் தான்.

**பொருளாதாரம்:** பொருளாதார ரீதியான ஏற்ற இறக் கங்களை சமாளிக்க சற்று போராட வேண்டியிருக்கும். இருப்பினும் நீங்கள் அதனை திறம்பட கையாளுவீர் கள். குடும்ப தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு வருமானம் சிறப்பாக இருக்கும். ஆடம்பர செலவு களைக் குறைத்துக் கொண்டால் மிகவும் நல்லது. கொடுக்கல் வாங்கல் தொடர்பான விஷயத்தில் மிகவும் கவனமுடன் இருப்பது உத்தமம். ஒரு முறைக்கு பல முறை ஆலோசித்து பின் முடிவெடுப்பது நல்லது. அவசர முடிவுகளால் ஆபத்தை சந்திக்கலாம்.
மிதுன ராசியில் பிறந்த பெண்கள் குடும்பத்தை சரி யான பாதையில் கொண்டு செல்வதற்கு போராடுவார் கள். உணவுக் கட்டுப்பாடு விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தினால் சுறுசுறுப்புடன் செயலாற்ற முடியும். உங்களுடைய பலம் எது? பலவீனம் எது? என்பதை நீங்கள் உணரும் காலமாக அமையப் போகிறது. தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

**பரிகாரம்: தோஷ நிவர்த்திக்கு நவக்கிரக பரிகா ரத்தை செய்வது நல்ல பலன் தரும். வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி பூஜை செய்து வர பணவரவு சிறப்பாக இருக்கும். ஏழை எளிய குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தால் பாவங் கள் நீங்கி புண்ணியம் சேரும்.**

## மாலைதீவில் உடல்கள் அடக்கம் முஸ்லிம்களை ஒதுக்கும் செயல்!

கொழும்பு, டிசெ.19
கொரோனாவால் உயிரிழந்த இலங்கை முஸ்லிம்களின் சட லங்களை மாலைதீவில் அடக்கம் செய்வது இலங்கையில் முஸ்லிம் சமூகம் மேலும் ஒதுக்கிவைக்கப்படுவதற்கு வழி வகுக்கும் என மத நம்பிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் அஹ்மெட் சஹீட் தெரிவித்துள்ளார்.
இந்த வேண்டுகோள் முஸ்லிம் சமூகத்திடமிருந்தோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ வெளியாகவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
உலக சுகாதார ஸ்தாபனம் தமது வழிகாட்டுதல்களில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம் என தெரிவித்துள்ளதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டி யுள் ளார். (ற-இ)

## தொற்றைக் கட்டுப்படுத்த ஒன்றிணைவு அவசியம்

*வலிறுத்துகிறார் அமைச்சர் சுதர்ஷினி*

கொழும்பு, டிசெ.19
கொரோனாப் பரவலைக் கட்டுப் படுத்த சுகாதாரப் பிரிவின் அனைத்து ஊழியர்களும் ஒன்றி ணைந்து செயலாற்றுவது அவ சியம் என வலியுறுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர் சுதர் ஷினி பெர்னாண்டோபுள்ளே, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விசேட வேலைத்திட்ட மொன்றைத் தயாரிப்பதிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.
சுகாதாரசேவை தொழிற்சங்கத் தலைவர்களை நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையா டியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
சந்திப்பில், கொரோனா பரவ லின் மூன்றாம் அலையைக் கட்டுப்படுத்துவதில் கீழ்மட்ட மக் களுடன் தொடர்புகளைப் பேணு வதிலும் அவர்களுக்கு உரிய தகவல்களை வழங்குவதிலும் காணப்படுகின்ற சிக்கல்கள், இதன்போது தாம் எதிர்நோக்கு கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் சுகாதாரசேவை தொழிற்சங்கத் தலைவர்கள் இராஜாங்க அமைச் சரிடம் தெளிவுபடுத்தினர். (வ-இ)

## சுற்றுலாப் பயணிகளுக்காக 26 தொடக்கம் விமான சேவை

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதி*

மாத்தறை, டிசெ.19
சுற்றுலாப் பயணிகளுக்காக டிசம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் விமான நிலை யம் திறக்கப்படும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
**மாத்தறை நகரில் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்** றுகையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
மக்களின் சுகாதார பாதுகாப்பை உறு திப்படுத்தி, சுற்றுலாத்துறையை மீண் டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை யும் முன்னெடுத்துள்ளோம்.
**இதன் மூலம் மக்களுக்கான நிவாரணத்** திட்டங்களையும் முன்னெடுக்கலாம்.
விமான நிலையத்தை திறக்குமாறு ஆரம்பத்தில் வலியுறுத்திய எதிர்க்கட்சி கள், இன்று திறக்க வேண்டாம் கொத் தணி உருவாகிவிடும், திறந்தாலும் பயணிகள் வரமாட்டார்கள் என வாதிடு கின்றனர்.
**நாட்டை மூடிவைத்திருந்த வேளையி** லும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.
எனவே, கொரோனா சவாலை எதிர் கொள்வதற்கு தயாராக வேண்டும்.
சுகாதார துறையினரின் ஆலோசனை யின் பிரகாரம் சுற்று லாத்துறை மீண் டும் ஆரம்பமாகும் என்றார்.
(வ-44)

# மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்

## சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ.19**

**நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்றைய தினம் மலையகத்துக்கு சென்ற வேளை, சில விசேட கோரிக்கைகளுக்கு அமைவாக பலரை சந்தித்து பேசினேன்.

எமது நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளமே முக்கிய பிரச்சினையாகும். தற்போதைய அரசாங்கமானது, மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்குகிறோம் என உத்தரவாதம் அளித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களின் தற்போதைய கூற்றுப்படி மாதத்துக்கு 10 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் ரூபா வரை கிடைக்கின்றது என சொல்கின்றனர்.

அதுவும் 26 வேலை நாள்களுக்குரிய தொகையாக இதனை வழங்குகின்றனர். இதனடிப்படையில் ஒருவரின் நாள் வருமானமானது 500 ரூபாக்கு குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் சில கழிவுகளை கழித்துவிட்டுத்தான் சம்பளத்தை வழங்குகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளை அரசாங்கம் முக்கியமாகக் கவனித்து, அவர்களுக்கு உரிய சரியான சம்பளத்தை உறுதி அளித்தது போன்று மிக விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ப)



# பிறக்கும் குழந்தைகளுக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி

## ஆய்வில் தகவல்

கொழும்பு,டிசெ.19

கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிகளுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, கொரோனா எதிர்ப்பு சக்தி காணப்படுகின்றது என்று சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

கொவிட் -19 வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுகின்ற கர்ப்பிணிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று கடுமையாகத் தாக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்திருந்தது.

எனினும் பிரசவத்தின் போது குழந்தைகளுக்குத் தொற்றுப் பரவும் என நிரூபிக்கப்படவில்லை. இந்த நிலையில் சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பிறக்கும் குழந்தைகளுக்கு குறித்த நோயை எதிர்ப்பதற்கான சக்தி அதிகரித்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் பிறக்கும் குழந்தைகளின் நிலைமையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (க-இ)

# விதிகளை மீறின் சட்ட நடவடிக்கை

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.19

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை தனியார் பஸ் உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். மேலும், பாதுகாப்பு விதிமுறைகளுக்கு முரணாக செயற்படும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நெருக்கடியான சூழலில் இருந்து மீள அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ரி5.இ)

# புலனாய்வு அதிகாரியின் தொலைபேசி பதிவுகள் அழிப்பு

## டிஜிட்டல் தடயவியல் பொறுப்பதிகாரி சாட்சியம்

கொழும்பு, டிசெ.19

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவின் தொலைபேசியில் இருந்த ஆவணங்கள் மீளப் பெற முடியாத வண்ணம் அழிக்கப்பட்டுள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தடயவியல் சோதனையை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தின் டிஜிட்டல் தடயவியல் ஆய்வுக்கூடத்தின் பிரதம பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பத் அமரகுமார, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார். ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய ஏதேனும் தடயங்கள் காணப்படுகின்றனவா என்பது குறித்து ஆராய்ந்தபோது, நிலந்த ஜயவர்தனவின் தொலைபேசியில் எவ்வித தடயங்களையும் பெற முடியவில்லை என சம்பத் அமரகுமார தெரிவித்துள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவால் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக்கணினியில் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு தேவையான தரவுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பி

பிரான்ஸில்

# முல்லைத்தீவு இளைஞன் கொரோனாத் தொற்றால் பலி



முல்லைத்தீவு, டிசெ. 19

புலம்பெயர்ந்து பிரான்ஸில் வசித்துவரும் முல்லைத்தீவு இளைஞன் ஒருவர் கொரோனாத் தொற்றால் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று குமுழமுனை கிழக்கைச் சேர்ந்த சிவபாதம் சாரங்கன் என்ற இளைஞனே உயிரிழந்தவர் ஆவார். (ம-19)

# இலங்கை நடிகைக்கு பிரிட்டனில் தடுப்பூசி

கொழும்பு, டிசெ.19

இங்கிலாந்தில் வசிக்கும் புன்யா ஹென்தெனியா என்ற இலங்கையைச் சேர்ந்த மூத்த நடிகை ஒருவர் கொவிட் தடுப்பூசியைப் போட்டுள்ளார்.

இவர் குருலு பெட்ட (ரன்மெனிகா), சிகுரு தருவா (அனுலா), கம்பெரலிய (நந்தா), பராசுதுமல (கமலா) மற்றும் ரன்சலு (சுஜாதா) போன்ற படங்களின் மூலம் இலங்கை சினிமா ரசிகர்களின் மனதை வென்ற ஒரு மூத்த நடிகை ஆவார். (ந-இ)

# மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணி ஆரம்பம்

கொழும்பு, டிசெ.19

நாட்டின் திரவ இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி வத்தளையில் ஆரம்பமாகும் என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். மேலும், எதிர்காலத்தில் நாட்டில் உருவாகக்கூடிய மின்சார நெருக்கடிக்கு மாற்று வழியாக ஒருங்கிணைந்த சுழற்சி திரவ இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கும் இந்த மின் உற்பத்தி நிலையத்தை சுயாதீனமான மின்சக்தி கருத்திட்டமாக தனிப்பட்ட முதலீட்டின் ஊடாக நிர்மாணித்து நடைமுறைப்படுத்துதல் பொருத்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# மரக்கறி கொள்வனவுக்கு அரசு தயார்!

கொழும்பு, டிசெ.19

நாட்டில் விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசு தயார் என்று பொருளாதார மறுசீரமைப்பு, வறுமையொழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயம் கிடைக்கச் செய்வது அரசின் எதிர்பார்ப்பு எனவும் அவர் கூறினார்.

வேலைத்திட்டத்துடன் கிராமத்துக்கு எனும் தொனிப்பொருளான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கண்டி மாவட்டத்துக்கான நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தையின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ந-இ)

# கட்சியின் கொறடா பதவியைத் துறந்தார் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, டிசெ. 19

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கொறடா பதவியிலிருந்து விலகியுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

"கடந்த 5 வருடங்களாக குறித்த பதவியில் இருந்துள்ளேன். அதுமட்டுமன்றி, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கருத்தாடல்கள் ஆரோக்கியமானதாக இல்லை. கொறடா என்கின்ற பதவியை வைத்து சிறிதரன் பணம் சம்பாதிக்கின்றார் என்பதுபோல் ஒரு மாயையை அவர்கள் ஊடகங்களில் உருவாக்கி வருகிறார்கள். அவ்வாறானதொரு பதவி எனக்குத் தேவையில்லை. இது பற்றி கூட்டமைப்பின் தலைவருக்கு இன்று (நேற்று) அறிவித்துவிட்டேன்." என்று அவர் தெரிவித்தார். (த-6-22)

## மரண அறிவித்தல்

### நித்தியானந்ததேவி கணேசலிங்கம்

(வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்)



தோற்றம் 26.05.1947

ஏற்றம் 18.05.2020

யாழ். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய நித்தியானந்ததேவி கணேசலிங்கம் நேற்று (18.12.2020) வெள்ளிக்கிழமை அதிகாலை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், சங்கரத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், மதனாவின் (Teacher, Ramanathan Hindu Ladies College) அன்புத் தாயும், காலஞ்சென்ற சச்சிதானந்தா, விவேகானந்தா, ஸ்கந்தானந்தா, சிவானந்தா, சண்முகானந்தா, காலஞ்சென்ற அருளானந்ததேவி ஆகியோரின் சகோதரியும், சற்குணானந்தன், மோகனவரதனின் (Accountant) அன்பு மாமியும், ஷானிகாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்று (18.12.2020) வெள்ளிக்கிழமை களுபோவில் ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நிறைவேற்றப்பட்டன.

18/8, 2/1, Hampden Lane,
Wellawatte.

தகவல்
மதனா (மகள் - 077 967 2551)
மோகனவரதன் (மருமகன் - 072 2469103)

## மரண அறிவித்தல்



### திருமதி மகாதேவி வைரவநாதர்

அராலி மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவி வைரவநாதர் 17.12.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு தையல்முத்து தம்பதியரின் மருமகளும், வைரவநாதர் (ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் (முன்னாள் வர்த்தகர்), அருணகிரிநாதன் (சட்டத்தரணி) மற்றும் கனகலிங்கம் (பொறியியலாளர்) சிதம்பரநாதன் (சங்கானை ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர்), குமரகுரு (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவசுந்தரம் (ஓய்வு நிலை அதிபர்), சிவனருள்தேவி (ஓய்வுநிலை அதிபர்) குகராசா (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகசிங்கம் (பொறியியலாளர்) மற்றும் கெசலட்சுமி, ஸ்ரீரஞ்சினி, கணேசதேவி, கமலாம்பிகை (ஆசிரியர்), இராஜகீதா (ஓய்வூதியர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.12.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவன் மற்றும் சகோதரர்கள்.

# தேசியப் பட்டியல் எம்.பி.யாக அத்துரலிய ரத்னதேரர் தெரிவு

கொழும்பு, டிசெ. 19

அபே ஜன பல (எமது மக்கள் சக்தி) கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தைப் பெற்றிருந்தது. அந்தப் பதவிக்கு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு குருநாகல் மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

அதனால் அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்க கட்சிக்குள் ஆதரவு அதிகமாக இருந்தது. அவருக்கு எதிர்ப்பும் இருந்தது வந்தது. இந்த நிலையில் அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த-6)

*புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகள் என்ன?*

# சம்பந்தன் தலைமையில் இன்று கொழும்பில் கூடுகிறது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ. 19

புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில்,

அதற்கான வேலைத்திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் களமிறங்கியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பிக்க வேண்டிய முன்மொழிவுகள் தொடர்பில் முடிவெடுக்கக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று கொழும்பில் கூடுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார். (த-22)

## கண்ணீர் அஞ்சலி

**திரு.கார்த்திகேசு நடராஜா (K.K.நடராஜா)**
(ஓய்வுநிலை அதிபர் - யா/ சுழிபுரம்
விக்ரோறியாக் கல்லூரி (1987 - 1989)




காரை மண்ணில் புகழ்பூத்த கல்விமானும், யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய **K.K.நடராஜா** அவர்களது மறைவையறிந்து கல்லூரி சமூகம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. அன்னார் அதிபராகவிருந்த காலத்தை கல்விச் சமூகம் மிகுந்த அக்கறையுடன் நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் துயருறும்
பழைய மாணவர் சங்கம்
யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி சரவணபவா

யாழ். தெல்லிப்பழை விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சரவணபவா அவர்கள் 16.12.2020 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சீரங்கம் சின்னத்தம்பி(ஆசிரியர்), சிவநேசம் தம்பதிகளின் அன்பு மகனும், கந்தசாமி ராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசீலாதேவி (சுசி) அவர்களின் அன்புக் கணவரும், அனுசியா, ஜனாத்தினி, சர்மிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரன் அவர்களின் அன்பு மாமனாரும், லீதிசன், டிவியேஸ் ஆகியோரின் அன்பு பேரனும், ஞானதேவி (கனடா), விவேகானந்தன் (இலங்கை), விஜயலக்ஸ்மி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**முகவரி: 140/9, விவசாயப் பாடசாலை வீதி, திருநெல்வேலி.**
**T.P: 021 568 3303, 077 983 5784**

தகவல் :
**உடன்பிறப்புகள்**

# கொவிட் மருந்து விரைவில் இலங்கைக்கு கிடைக்காது!

## இராஜாங்க அமைச்சர் சுதர்சினி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
இலங்கைக்கு கொரோனா வைரஸ் மருந்து விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை என கொரோனா வைரஸ் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொரோனா வைரஸ் மருந்தை இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் எதையும் இதுவரை இலங்கை மேற்கொள்ளவில்லை.



அனைத்து மருந்துகளும் இன்னும் சோதனை நிலையிலேயே உள்ளன. உலக சுகாதார ஸ்தாபனம் எந்த மருந்துக்கும் இதுவரை அனுமதி வழங்கவில்லை. உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரமளித்ததும் மிகச் சிறந்த மருந்தை இலங்கை அரசு தெரிவு செய்யவுள்ளது.
தற்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மருந்துகள் குறித்த முக்கியமான விஞ்ஞான ரீதியிலான தரவுகள் இலங்கைக்கு இன்னமும் கிடைக்கவில்லை.
இந்த நிலைமைகளை அரசு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது எனத் தெரிவித்தார். (ഗ-இ)

## கொரோனா பாதித்தோருக்கு ஆலயங்கள் உதவவேண்டும்!

### இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், டிசெ.19
கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் எனப் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்களுக்கு அந்தந்தப் பிரதேச ஆலயங்களும் தன்னார்வலர்களும் உதவிக்கரம் நீட்டவேண்டும் என அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.
இதுதொடர்பில் சைவ மகா சபை தெரிவித்ததாவது,
கொரோனா தற்போது யாழ்ப்பாணம் உட்பட வட பகுதியை ஆக்கிரமித்து நிற்கின்றது.
இத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இதே போன்று தொற்றாளர்களுடன் தொடர்புடைய பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்படுகின்றன.
இவர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிப்பொருள்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்தும் குடும்பங்கள் உணவுக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன.
இதனால் இவர்களுக்கு பிரதேசத்தில் உள்ள ஆலயங்களும், தன்னார்வலர்களும் பிரதேச செயலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக உதவ வேண்டும். இது இறைவனுக்கு செய்யும் தொண்டுக்கு நிகராகும் எனத் தெரிவித்துள்ளது. (ഗ-இ)

## இறைவரித் திணைக்களத்தின் செயற்பாடு இனி ஒன்லைனில்!

கொழும்பு, டிசெ.19
உள்நாட்டு இறைவரித் திணைக்கள தலைமை அலுவலகத்தின் நாளாந்த செயற்பாடுகளை ஒன்லைன் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தலைமை அலுவலகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
வரிப்பண அறவீட்டுக்காக தலைமை அலுவலகத்துக்கு அருகிலுள்ள இரண்டு அரச வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இவ்வாறு வரி செலுத்தப்பட்டமைக்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க விசேட கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (ഗ-இ)

## வடக்கு கிழக்கில் மழை அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ.19
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இது தொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள காலநிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
நாட்டில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது காணப்படும் மழை நிலைமை அடுத்த சில நாள்களில் சற்று அதிகரிக்கும்.
கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பாவனைக்கு உதவாத சீனாவின் ரின்மீன்கள்!

### 48 கொள்கலன்கள் திருப்பி அனுப்பிவைப்பு

கொழும்பு, டிசெ.19
768 மெட்ரிக் தொன் ரின்மீன்களைக் கொண்ட 48 கொள்கலன்களை மீண்டும் சீனாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்ட ரூபா 384 மில்லியன் மதிப்புள்ள ரின் மீன்களைக் கொண்ட கொள்கலன்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளன.
இதற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன்களில் நிராகரிக்கப்பட்ட இருப்புக்களைக் கொண்ட முதல் இரண்டு கொள்கலன்களும் நேற்று மாலை திருப்பி அனுப்பப்பட்டன என்று இலங்கை சுங்க ஊடகச் செய்தித் தொடர்பாளர் சுனில் ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.
இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் எஸ்.எல்.எஸ். 591 2014 தரச் சான்றிதழுடன் இந்த ரின் மீன்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ഗ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** பேச்சினால் சில விஷயங்களை முடிக்கும் நாள். உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும். ஒற்றுமையால் வீடு களை கட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்த நாள்களின் வருத்தங்கள் மறையும் நாள். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சி பற்றி பேசுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகம் வரும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

**மிதுனம்:** செலவினங்கள் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும். லேசான வருத்தமளிக்கும் செய்தி வரும். பணிக ளில் மிகுந்த கவனம் தேவை.

**கடகம்:** திட்டமிடாத செலவுகள் வரும் நாள். பிறரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மேலதிகாரி உங்களை தவறாக புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குப் பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** மாறுபட்ட நாள். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் மதிப்பார்கள். அலுவலகத்தில் இழந்த உரிமைகள் மீளும். தொழிலில் சிறு மாற்றம் உண்டாகும். மனக்கலக்கங்கள் தீரும்.

**கன்னி:** பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிக்கும் நாள். முயற்சியால் சில விஷயங்கள் வெற்றியாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து தேவையின்றி கவலைப்படுவீர்கள்.

**துலாம்:** அதிகம் உழைக்க வேண்டியிருக்கும் நாள். நிலுவைத் தொகைகள் வசூலாகும். அலுவலகத்தில் உங்களின் புகழ் கூடும். திட்டமிட்ட செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தம்பதி இடையே கருத்து வேறுபாடு வந்து நீங்கும் நாள். பழைய கடனை நினைத்து கவலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளை சுலபமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** பணியில் விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் சிறு ஏமாற்றத்தைச் சந்திப்பர். வெளியூரிலிருந்து சுபச்செய்தி வரும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றும் நாள். பணவரவு திருப்தி தரும். பெண்கள் பாடுபட்டு இலட்சியத்தை அடைவர்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் நாடி வருவார்கள்.

# கொரோனா நெருக்கடிக்குள் தேர்தலை நடத்துவது சிரமம்

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.19**
**கொரோனா நெருக்கடிமிக்க இந்த சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது மிகவும் சிக்கலானதும் சவால்மிக்கதுமான விடயம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கட்சி உறுப்பினர்களுடன் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடனற்ற வெறும் நிதி உதவியாக எம்.சி.சி ஊடாக இலங்கைக்கு கிடைக்கவிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் இல்லை என்பதை மிலேனியம் சவால் பணிப்பாளர் சபை உத்தியோகபூர்வமாகவே அறிவித்து விட்டது. இந்த ஒப்பந்தத்துக்கான கால எல்லையை நீடிக்குமாறு ஏற்கனவே இருமுறை கோரப்பட்டது.
மூன்றாவது முறையும் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலேயே ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. ஆனால், தாங்கள் நிராகரித்து விட்டோம் என அரசு தற்போது சொல்லும்.
அடுத்த ஆண்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு தீர்க்கமான காலப்பகுதியாக அமையும். மாகாண சபைத் தேர்தலில் புதிய முகங்களைப் போன்று பழைய முகங்கள் பலவும் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடும். தேர்தலுக்கு செலவிட வேட்பாளர்களிடம் பணமிருக்காது. கொரோனா அச்சுறுத்தலில் இந்தத் தேர்தலை நடத்துவது சிக்கலான சவால்மிக்க விடயம் - என்றார். (வ-இ)

## கொழும்பில் சாவு உச்சம்; இதுவரை 117 பேர் காவு!

கொழும்பு, டிசெ.19
இலங்கையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த 160 பேரில், 117 பேர் கொழும்பு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.
இதேவேளை, கம்பஹாவில் 15 பேரும், களுத்துறையில் 11 பேரும், புத்தளத்தில் 5 பேரும், குருநாகலில் 4 பேரும், மாத்தறையில் 2 பேரும் மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அடையாளம் உறுதிப்படுத்தப்படாத ஒரு உயிரிழப்பும், சிறைச்சாலைகளில் இரண்டு கொரோனா உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளன.
அத்துடன், நாட்டில் பதிவான 160 உயிரிழப்புக்களில் 98 உயிரிழப்புக்கள் மருத்துவமனைகளில் பதிவாகியுள்ளன. வீட்டில் அல்லது மருத்துவமனைக்கு அழைத்துவரும் சந்தர்ப்பத்தில் 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கொரோனாவின் மூன்றாவது அலையின் தாக்கத்தில் 147 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 4 பேர் 30 வயதுக்குக்கு குறைந்தவர்கள் எனவும், 100 பேர் 61 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (வ-22)

## மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறினால் பி.சி.ஆர்




கொழும்பு, டிசெ.19
மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறுவோருக்கு நேற்று தொடக்கம் எழுமாறான அடிப்படையில் பரிசோதனைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இதன்படி, பேருந்துகள் உட்பட வாகனங்களில் பயணிப் பவர்கள் இவ்வாறு எழுமாறான பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## நாட்டின் இறையாண்மை அடகுவைக்க முடியாதது!

### செஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிக்காக நாட்டின் இறையாண்மையை அடகு வைக்க முடியாது என சமுர்த்தி, மனை பொருளாதார நுண்நிதி சுய தொழில் மற்றும் அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.
குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;
அமெரிக்காவுடனான எம்.சி.சி ஒப்பந்தம் நாட்டின் இறையாண்மைக்கும், சுயாதீனத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.
நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப் போவதில்லை என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்.
எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி கடந்த வருடம் டிசெம்பர் மாதம் துறைசார் நிபுணர் குழுவை நியமித்தார். நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. குறித்த அறிக்கையின் பிரகாரம் எம்.சி.சி ஒப்பந்தத்தை கைச்சாத்திடப் போவதில்லை என அரசு உறுதியாக இருந்துடன், ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசாங்கம் எந்தவித முயற்சி களையும் முன்னெடுக்கவில்லை. என்றார். (ரி5-இ)

## ஸ்ரீலங்கா எயார்லைன் ஊழியர்களுக்கு கொரோனா!

கொழும்பு, டிசெ.19
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா எயார்லைன் கேட்டரிங் செயற்பாட்டு பிரிவில் பணிபுரியும் 7 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளன என ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேலும், இந்த குழுவுடன் நெருக்கமாக தொடர்பிபை பேணியிருந்த மற்றுமொரு குழுவினர் தற்போது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## 205 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, டிசெ.19
கொரோனாப் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 205 இலங்கையர்கள் நாடு திரும்பினர். இதற்கமைய கட்டாரிலிருந்து 163பேரும் ஜப்பானிலிருந்து 42பேரும் இவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று காலை வந்தடைந்தனர். அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## பயணிகளின் விவரங்களும் பதிவு செய்யப்பட வேண்டும்

### பேருந்து நடத்துநர்களுக்கு பணிப்பு

பேருந்தில் பயணித்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அவருடன் பயணித்தவர்களை தனிமைப்படுத்தும் வகையில் பயணிகளின் முகவரி, அடையாள அட்டை எண் உட்பட பெயர் விவரங்களை, பேருந்து நடத்துநர்கள் பதிவு செய்ய வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொதுப்போக்குவரத்து சேவைகளைக் கொண்டுள்ளவர்கள், பயணிகளின் தகவல்களை சேகரித்து வைப்பதன் ஊடாக அவசரத் தேவைகளின்போது, அவர்களைத் தொடர்புகொள்ள இலகுவாக இருக்கும்.
இதேவேளை, தங்களைத் தொடர்புகொள்ளக்கூடிய அட்டைகள் பலரிடம் அது இருப்பதில்லை. இதனால் தங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் மற்றும் அலைபேசி இலக்கம் ஆகியவை உள்ளடங்கிய சிறிய கடதாசித் துண்டை, எப்போதும் பயணிகள் தங்களிடம் வைத்துக்கொள்வது சிறந்தது. இதன்மூலம், தங்கள் தகவல்களை புத்தகத்தில் நிரப்பாமல், தங்களிடம் உள்ள கடதாசித் துண்டை கொடுப்பது இலகுவாக அமையும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, டிசெ.19
ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்ட உறுப்பினர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டப்பிரிவுக்கும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. (ரி5.இ)

பௌதிக ஆசிரியர் திரு. V. யோகதாசன்
அவர்களின்

# மணிவிழா வாழ்த்து




காரைநகர் மைந்தன் திரு. V. யோகதாசன் அவர்கள் ஆசிரிய சேவையில் 29 வருடங்கள் சேவையாற்றி இன்று (19.12.2020) சனிக்கிழமை ஓய்வுபெறுகின்றார். இவர் தனது ஆசிரியப்பணியை யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய பிரபல கல்லூரிகளில் சேவையாற்றினார்.

எல்லாக் கல்லூரிகளும் உம் பெயர் சொல்லுமே!
பௌதிகவியலை பக்குவமாய் விளக்குவீரே!
விழாக்கள் வந்தால் விரும்பியே நீரும்
இனியகானம் இசைத்து அனைவரையும் மகிழ்விப்பீரே!
நல்லதோர் குருவாய் தரணியில் மிளிர்ந்து
மணிவிழாக்காணும் மாண்புறு ஆசான் நீவீர் வாழ்க!
ஓய்வுக்காலம் ஒல்காப்புகழுடன்
உள, உடல் நலமும் சிறந்து
வாழ்நாள் எல்லாம் மகிழ்வுடன் வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்: ஆசிரிய நண்பர்கள்.

# விவசாய விஞ்ஞானி விருது கிளிநொச்சி அரசகேசரிக்கு



கிளிநொச்சி, டிசெ. 19
2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாய விஞ்ஞானிக்கான இலங்கையின் தேசிய விருது கிளிநொச்சி இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலைய உதவிப் பணிப்பாளரான கலாநிதி அரசகேசரிக்கு நேற்று வழங்கப்பட்டது.

வெங்காயம், மிளகாய், நிலக்கடலை, குரக்கன், மா போன்ற பயிர்களில் புதிய இனங்களை கண்டுபிடித்தமைக்காக, பேராதனையில் நடைபெற்ற நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டது. வருடந்தோறும் ஒருவர் இந்த விருதுக்குத் தெரிவு செய்யப்படுகின்றார். முதன்முதலாக இந்தமுறை தமிழர் தெரிவாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (தஇ)

## திறக்கப்படுகின்றன நூதனசாலைகள்

கொழும்பு, டிசெ. 19
மத்திய கலாசார நிதியத்தின் கீழ் உள்ள அனைத்து நூதனசாலைகளும் நாளை தொடக்கம் திறக்கப்படவுள்ளன. சுற்றுலாத்துறை சேவையை முன்னெடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய கலாசார நிதியம் அறிக்கையூடாகத் தெரிவித்துள்ளது. பொலநறுவை, சிகிரியா, கதிர்காமம், காலி, கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நூதனசாலைகளே திறக்கப்படவுள்ளன. (தஇ)

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு Billing செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 077 419 5015

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத் திற்கு வேலையாட்கள் தேவை
1. மேசன் 1800.00 ரூபா
2. அலுமினிய பிற்றிங் (அனுபவமுள்ளவர்கள்
(வேலை தொடங்கும் நேரம் 8.00AM-5.45PM)
தொடர்புகளுக்கு: 0759183940 (Airtel)
(திங்கள்-சனி வரை 8.30AM-5.00PM வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

### விற்பனைக்கு

1 வயது 7 மாதம் நிரம்பிய ஜேர்மன் சப்பேட் ஆண் நாய் விற்பனைக்கு
தொடர்பு: 077 290 6841

### விற்பனைக்கு

டிப்பர் வாகனம் LN என்ற தொடரிலக்கத்தை உடைய கார்கோ டிப்பர் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு- 077 367 8019

### வீடு விலைக்கு தேவை

நல்ல சூழலில் ஓரளவான விலைக்கு வீடு தேவை.
077 078 3832

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 05 . 12 . 1975



இறப்பு 19 . 11 . 2020

திதி: பஞ்சமி

கடந்த (19.11.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்திய
எமது அன்புத் தெய்வம்

## அமரர் மகிந்தன் பவானி

தாலி கட்டிய கணவர் பரிதவித்து ஏங்கி நிற்க
பெற்ற அம்மா அப்பா சகோதர சகோதரிகள் கதறி அழ
ஆசை மாமியார் அந்தரித்து கலங்கி நிற்க
வெளிநாட்டு மைத்துனர் மைத்துனிமார் என்ன செய்வது என்று
- தெரியாமல் ஏக்கத்துடன் பதறிட
அயலவர் சிநேகிதர் மனம் நொந்து தேம்பி அழுதிட
எங்கு நீ சென்றாய் பவானி.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19.12.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.200/2, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 02 . 1963



உதிர்வு 30 . 12 . 2019

## அமரர் கலாநிதி ஜெயராமநாதன்

ஆண்டொன்று ஆனதுவோ அம்மா
ஆறவில்லை எங்கள் துயரும்
நீங்கள் இல்லாத இடம் எமக்கு - அம்மா
நித்தமும் நிலையான வெற்றிடமே
கருணைமிகு பண்பதனால் கருத்தில் நின்றீர் - அம்மா
கண்ணிமை போல் எமக்கிருந்து காவல் செய்தீர்
பெருமையுறப் பேணி எமைப் பேரன்பு ஊட்டி - அம்மா
பேதலிக்க விட்டெங்கே போய் விட்டீர்
எமைவிட்டு நீங்கள் செல்லவில்லை - அம்மா
என்றும் எம்முடன் தோன்றாத் துணையாவீர்கள்
அம்மா நீங்கள் இறைவன் பாதத்தில்
அமைதியுடன் வீற்றிருக்க வேண்டுகின்றோம்.

இல.8, கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(077 418 2632)

மக்ரோனுக்குத் தொற்று:

# கொரோனா அச்சத்தில் ஐரோப்பிய தலைவர்கள்


**பரிஸ், டிசெ. 19**

**பிரான்ஸ் ஜனாதிபதி இம்மனுவல் மக்ரோனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பியத் தலைவர்கள் பலரும் தம்மைத் தாமே தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு முன்வந்துள்ளனர்.**



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மனுவல் மக்ரோனுக்கு நேற்றுமுன்தினம் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் எலிசே மாளிகையில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டார். வார இறுதி நாள்களில் பிரான்ஸ் ஜனாதிபதி ஓய்வெடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மாளிகையில் மக்ரோன் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். இந்த நிலையில் மக்ரோனுடன் தொடர்பைப் பேணியவர்கள் என்ற அடிப்படையில் சில ஐரோப்பியத் தலைவர்கள் தம்மைத்தாமே தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டம் பெல்ஜியம் நாட்டின் பிரசெல்ஸ் நகரில் கடந்த 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மனுவேல் மக்ரோன், பிரான்ஸ் பிரதமர் ஜீன் கெட்ஸ் டெக்ஸ், ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலோ மெர்கல், ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சஜ்ஜேஸ், லக்சம்பேரக் பிரதமர் சேவியர் பெட்டல், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வெண்டர் லியன் உட்பட பல தலைவர்கள் கலந்துகொண்டனர். மக்ரோனுக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டதையடுத்து அவர்களில் பலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தம்மை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர். (ம-வஇ)



விவசாயிகளுக்கு ஆதரவாக

## தி.மு.கவின் தலைமையில் தமிழகத்தில் கவனவீர்ப்பு!

சென்னை, டிசெ. 19

புதுடில்லியில் இடம்பெற்றுவரும் விவசாயிகளின் தொடர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொரோனா காரணமாக 144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால் உண்ணாவிரதத்துக்கு பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை. ஆனால் தடையை மீறி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் போராட்டம் ஆரம்பமானது. அதில் கனிமொழி, பாரிவேந்தர், வைகோ, திருநாவுக்கரசர், வேல்முருகன் உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்றுள்ளனர். போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பச்சை நிற மாஸ்க் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-வஇ)



## பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட அனைத்து மாணவர்களும் மீட்பு!

அபுஜா, டிசெ. 19

நைஜீரியாவின் வடக்கு பகுதியில் உள்ள ஆண்கள் பாடசாலையிலிருந்து பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட மாணவர்களில் 344 பேரை பாதுகாப்பு படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

நைஜீரியாவின் வடக்கு பகுதியில் உள்ள ஆண்கள் பாடசாலையில் அண்மையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் அங்கு 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல் போயிருந்தனர். அவர்கள் காணாமல் போனமைக்கு தாமே காரணமென பொகோஹராம் பயங்கரவாதிகள் பொறுப்பேற்றனர். தொடர்ந்து நடந்த தேடுதல் நடவடிக்கையில், மாணவர்கள் பிணைக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்த காட்டுப்பகுதியை நைஜீரிய பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்தனர்.

அதையடுத்து பயங்கரவாதிகள் மாணவர்களை விட்டுவிட்டு காட்டுப்பகுதியிலிருந்து தப்பிச்சென்றுள்ளனர். பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட அனைத்து மாணவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர். எனினும் மேலும் சில மாணவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-வ)

## பனாமா நாட்டுக் கப்பல் வியட்நாமில் கவிழ்ந்தது

*15 மாலுமிகள் மாயம்*

கொழும்பு, டிசெ. 19

பனாமாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் ஒன்று வியட்நாம் கடற்பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குறைந்தது 15 மாலுமிகள் காணாமல்போயுள்ளனர் என வியட்நாம் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன மாலுமிகள் 11 பேர் மற்றும் வியட்நாமிய மாலுமிகள் 4 பேருடன் ஜின் ஹாங் என்ற கப்பல் 7 ஆயிரத்து 800 தொன் களிமண்ணை மலேசியாவிலிருந்து ஹொங்காங்குக்கு கொண்டு சென்று கொண்டிருந்தபோது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கப்பலின் மாலுமிகள் உதவிக்காக வியட்நாமைத் தொடர்பு கொண்டமைக்கு இணங்க காணாமல்போன மாலுமிகளைத் தேடுவதற்காக வியட்நாம் கடலோரக் கப்பல் உள்ளிட்ட மீட்புக் குழு அனுப்பப்பட்டுள்ளது. (ம-வ)

பறவைக் காய்ச்சல் எதிரொலி

## 6 மில்லியன் பறவைகளை கொன்றது தென்கொரியா!

சியோல், டிசெ. 19

பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் ஒரு முயற்சியாக நாடு முழுவதும் 6.1 மில்லியன் பறவைகளை தென்கொரியா கொன்று குவித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் தொடர்பான 18 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தென்கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கொல்லப்பட்டவற்றில் 4 மில்லியன் கோழிகளும், 1.2 மில்லியன் காடைகளும் உள்ளடங்குகின்றன என தென் கொரியாவின் விவசாய, உணவு மற்றும் கிராம விவகார அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ம-வஇ)



அமெரிக்காவில் தற்போது கடும் பனிப்பொழிவு நிலவுகின்றது. அந்த நாட்டின் பல மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஐவர்...

ணிக்கை 165 ஆக அதிகரித்துள்ளது.

**161ஆவது சாவு**

அகலவத்தை பகுதியைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார். கடந்த 11ஆம் திகதி அகலவத்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். கொரோனாத் தாக்கத்துடன், அதிக இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோயே இந்த உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**162ஆவது சாவு**

மக்கோன பகுதியில் 86 வயதான பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். கடந்த 15ஆம் திகதி தனது வீட்டிலேயே அவர் உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தாக்கத்துடன், அதிக இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோயே இந்த உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**163ஆவது சாவு**

கொழும்பு 15 ஐச் சேர்ந்த 76 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்ட நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து ஹோமாகம மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே அவர் நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட நியூமோனியா தாக்கமே சாவுக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**164ஆவது சாவு**

மஹரகம பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார். கொழும்பு தெற்கு ஆதார வைத்தியசாலையிலிருந்து ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட நியூமோனியா தாக்கமே இந்த உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**165ஆவது சாவு**

அதேவேளை, வத்துப்பிட்டிவல பகுதியைச் சேர்ந்த 86 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 165பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 152பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## திருநாவற்குளம்....

திருநாவற்குளத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது. இவருடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் அவரது வீட்டில் தங்கியிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி இவர்களுக்கு பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. அவர்கள் நான்கு பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள், உறவினர் ஒருவருக்கே தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை வவுனியாவில் இதுவரை 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் வவுனியாவில் பல இடங்களிலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ம-110)

## மூன்றாவது...

ணியில் இதுவரை 77 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், புங்குடுதீவு, பருத்தித்துறை, நெல்லியடி, காரைநகர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இந்தக் காலப்பகுதியில் 23 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டனர். இதுவரை தொற்றுக்குள்ளான 100 பேரில் 21 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-இ)

## திருநெல்வேலி...

எடுக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின் முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன. அவர்களில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

30 வயதுடைய இவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. இவர் மருதனார்மடம் சந்தைக்கு வெளியே உள்ள கடை ஒன்றில் பணியாற்றுகின்றார். திருநெல்வேலிச் சந்தைக்கு மரக்கறி வாங்கச் சென்ற சமயமே அவரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரி எடுக்கப்பட்டுள்ளது. (எ-5,26,7)

## சண்டிலிப்பாய்...

ள்ளது. நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண் ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அவரின் உறவினர் ஒருவர் மருதனார்மடம் சந்தையில் வர்த்தகம் செய்பவராவார். இந்தப் பெண் கடந்த 12ஆம் திகதியே தனிமைப்படுத்தப்பட்டார்.

இவருக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவுடன், அவருடன் தொடர்புடையவர்கள் இனங்காணும் நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்திருந்தனர்.

இந்தப் பெண் அரசின் ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 12ஆம் திகதிவரை இவர், கோப்பாயில் நடந்த வேலைவாய்ப்புப் பயிற்சியில் கலந்துகொண்டுள்ளார். அந்தப் பயிற்சியில் 52 பேர் பங்குபற்றியுள்ளனர்.

அந்தப் பயிற்சியில் கலந்துகொண்ட 52 பேரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவர்களைத் தேடிச் சென்ற சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த 52 பேரும் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலகமே அவர்களை டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியிருந்தது. அதையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கும், பிரதேச செயலகத்துக்கும் இடையே வாக்குவாதம் நடந்துள்ளது என்று தெரிகின்றது.

தனிமைப்படுத்தப்பட்ட ஒருவரின் பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்காத நிலையில், அவருடன் தொடர்புடையவர்களை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தியமை தொடர்பில், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாகத் தங்களுக்கு, பிரதேச செயலகத்தினர் தகவல் தெரிக்காதமையையும் கண்டித்துள்ளனர். தற்போது அந்த 52 பேரையும் தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-5)

## சந்தை...

ளாவர். இவர்கள் தாவடி வடக்கைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். மருதனார்மடம் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவரின் மனைவியும், மகளுமே தொற்றுக்குள்ளாகியுள்ளனர். குத்தகைக்கு எடுத்தவருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-5)

## பலசரக்கு....

ள்ளார். இவர் சுன்னாகம் சந்தையில் மரக்கறி கொள்வனவு செய்பவர் என்று தெரிவித்துள்ளார். அவர் மருதனார்மடம் சந்தையிலும் மரக்கறி கொள்வனவு செய்பவர் என்று அந்த இடத்து மக்கள் கூறுகின்றனர்.

தொற்றாளருடன் தொடர்பைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-5,26)

## அறிவுறுத்தலை....

சுங்கானை, சுன்னாகம் பொதுச் சந்தைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, வடக்கில் உள்ள சந்தைகள் அனைத்தும் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளன.

எனினும், அறிவித்தலை மீறி நேற்று திருநெல்வேலிச் சந்தைக்கு வெளியே வீதியோரத்தில் மரக்கறி விற்பனையில் வியாபாரிகள் சிலர் ஈடுபட்டனர். எனினும் அவர்களைப் பொலிஸார் அங்கிருந்து அகற்றினர். (எ-7)

## காரைக்குடிக்கு...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

காங்கேசன் துறைமுகத்தை மீள் நிர்மாணம் செய்து அங்கிருந்து தமிழகத்தின் காரைக்குடிக்கு கப்பல் சேவையை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதன் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட சூறாவளியால் கப்பல் சேவைக்காக அமைக்கப்பட்டிருந்த கட்டமைப்பில் சேதம் ஏற்பட்டுள்ளது. அதைப் பாதுகாப்பதற்காக கருங்கல் தேவையாகவுள்ளது. வடக்கின் வேறு இடங்களில் இருந்து கருங்கல் எடுப்பது சிரமம் என்பதால் வவுனியாவில் இருந்து அதைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலரும், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரும் இணைந்து சுரங்கப் பணியகத்துடன் கலந்துரையாடி, முரண்பாடுகள் இல்லாது, அதனை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (எ-110)

## 800...

ஒரு தடவையே இவ்வாறு கிரகங்கள் ஒன்று சேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வியாழன் மற்றும் சனி கிரகங்கள் ஒன்று சேரவுள்ளன. மாலை 6.45 மணியளவில் இதன் உச்ச நிலையை கண்காணிக்க முடியும். 800 வருடங்களுக்கு ஒரு தடவை இவ்வாறு கிரகங்கள் ஒன்று சேர்கின்றன. அதை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும்.- என்றார். (எ-ரி4)

## 45 நாள்களேயான...

கொழும்பு லேடி ரிட்ஜ்வே தேசிய சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிசு உயிரிழந்துள்ளது.

நியூமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையிலே வைத்தியசாலையில் இந்தச் சிசு சேர்க்கப்பட்டது எனவும், உயிரிழந்துள்ள சிசுவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

குழந்தையின் உடல் நேற்று மாலை பொரளை மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த 8ஆம் திகதி பிறந்து 20 நாள்களான ஆண் சிசு இதே வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தது. (எ-22)

## சட்டவிரோத...

இந்த விடயம் நேற்று நடந்த வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், "வவுனியா வடக்கில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் கிபிள் ஓயாத் திட்டம் என்ற திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கு நீங்கள் அனுமதி கொடுத்துள்ளீர்களா?" என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரான வடக்கு ஆளுநரிடம் கேள்வி எழுப்பினார்.

வடக்கு ஆளுநர் அதற்கு "இல்லை" என்று பதிலளித்துள்ளார். அதேவேளை, இந்தத் திட்டத்துக்கான நிதி இன்னமும் ஒதுக்கப்படவில்லை என்று மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இந்தத் திட்டத்துக்காக வரவு செலவுத் திட்டத்தில் 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட அறிக்கையில் வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காடுகளை அழித்து விவசாய நிலங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி கொடுக்காது இதனைச் செய்ய முடியுமா?. ஒருங்கிணைப்புக் குழு அனுமதி இல்லாது இந்தத் திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டும் என்றார்.

அப்போது கருத்துத் தெரிவித்த வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் இ. தணிகாசலம், இந்தத் திட்ட அறிக்கை எமக்குக் கிடைத்தது. நாம் சில ஆட்சேபனைகளை அனுப்பியிருந்தோம். இந்தத் திட்டத்தில் 62 அடி உயரத்துக்கு நீரைத் தேக்கி நான்கு கிலோமீற்றர் நீளமான அணைக்கட்டும் அமைக்கப்படவுள்ளது. அந்த அணைக்கட்டு மற்றும் நீரேந்து பகுதி வவுனியா மாவட்டத்திலும், அதன் பயன்பெறுவோர் முல்லைத்தீவு மாவட்டத்தின் சம்பத்நுவர மற்றும் போகஸ்வெவ (சிங்களக் குடியேற்றங்கள்) பகுதிகளில் உள்ளனர் என்றும் தெரிவித்தார். (எ-110)

## இலங்கைவரும்...

அநேகமாக ஐ.நாவின் அரசியல் பிரிவு தலைவர் ரோஸ்மேரி டிகார்லோவே எதிர்வரும் ஜனவரி மாத ஆரம்பத்தில் கொழும்பு வரவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சில சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் அவர் சந்திப்புகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் 2021 பெப்ரவரியில் ஜெனிவாவில் ஆரம்பமாகிறது. அதேநேரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் இருந்து விலகிக் கொள்வதாக கோத்தாபய ராஜபக்ச அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியின் இலங்கை வருகை முக்கியத்துவம் மிக்கதாக நோக்கப்படுகின்றது. அவர் சம்பந்தனுடனும் கலந்துரையாடவுள்ள நிலையில், இலங்கைக்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் வருகையாக இது இருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது. (த-22)

# அடிலெய்ட் டெஸ்ட்: இந்தியா முன்னிலை

ஆஸ்திரேலிய இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

அடிலெய்ட் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்று வரும் ஆட்டத்தில் இரண்டாம் நாளுக்காக இந்திய அணியின் சகா, மற்றும் அஸ்வின் ஆட்டத்தை தொடர்ந்தனர்.

ஆஸியின் நேர்த்தியான வேகப்பந்து வீச்சுக்கு எதிரே மேலதிகமாக 11 ஓட்டங்கள் பெறப்பட இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. துடுப்பாட்டத்தில் சகா(9), அஸ்வின்(15), உமேஸ் யாதவ்(6), பும்ரா(4), சமி(0) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரார்க் 4 இலக்குகளையும் கம்மின்ஸ் 3 இலக்குகளையும் ஹசில்வூட், லையன் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆஸி அணி சார்பில் முதல் இன்னிங்ஸுக்காக வேட், பேர்ன்ஸ் இணை ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். இருவரும் தலா 8 ஓட்டங்களுடன் பும்ராவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினர். தொடர்ந்து வந்த ஸ்மித் அஸ்வினின் சுழலில் ஒரு ஓட்டத்துடன் ரகானேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க ஹெட்டும் 7 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார். டெஸ்ட் அரங்கில் தனது கன்னி ஆட்டத்தில் விளையாடிய கிறீன் 11 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். அடுத்து வந்த அணித்தலைவர் பெய்ன், லபுசேனுடன் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். லபுசேன் 47 ஓட்டங்களுடன் உமேஸ் யாதவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூவானார். பின்வரிசையில் கம்மின்ஸ்(0), ஸ்ரார்க்(15), லையன்(10), ஹசில்வூட்(8) ஓட்டங்களுடன் ஏமாற்ற ஆஸி 191 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. அணித்தலைவர் பெய்ன் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும் உமேஸ் யாதவ் 3 இலக்குகளையும் பும்ரா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

53 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக களம்புகுந்த இந்திய அணி இரண்டாம் நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிரித்வி ஷா 4 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க மயாங் அகர்வால் 5 ஓட்டங்களுடனும் பும்ரா ஓட்டம் எதனையும் பெறாமல் களத்தில் உள்ளனர்.

(ரி-4)

**மாபிள்ஸ்**

றெறாசோ ( Terrasso) மாபிள் பதித்தல்
கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள்
நவீன முறையில் செய்து தரப்படும்
Since-1952
தொல்புரம்.
தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 01 . 1921

மறைவு 17 . 12 . 2020

### திருமதி கனகலிங்கம் பாக்கியம்

யாழ். குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் பாக்கியம் நேற்றுமுன்தினம் (17.12.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர் - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லர் கனகலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றசென்றவர்களான முத்துதம்பி, சரஸ்வதி, ரத்தினசிங்கம், சுபத்திரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவனேஸ்வரியின் அன்புத் தாயா ரும், தளையசிங்கம் அவர்களின் அன்பு மாமியாரும், பெறாமக்களான பாலசுப்பிரமணியம், சோமசுந்தரம், தர்மராசா மற்றும் காலம்சென்றவர்களான அருளானந்தம், செல்வராசா ஆகியோரின் பாசமிகு பெரியதாயும், ஜெயரஜீபன், ஹம்சன், சுதர்சன், நிறஞ்சினி, பிரதீபன், மயூரன், கிரிஹரன், தர்மினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜஷ்வினி, அஷ்வின், அக்ஷயா, ஹர்ஷான், சஷ்மிகா, ஷாரபி, அஷ்னிகா, ஆத்விக், அபிமன், ஷஸ்வந், ஹர்னிதா, அக்ஷித் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (17.12.2020) வியாழக்கிழமை காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
தளையசிங்கம் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் தர்மலிங்கம்

(இளைப்பாறிய தையல் ஆசிரியை)



உரும்பிராயை பிறப்பிடமாகவும் நிம்மதி வீட்டை முன்னைய வதிவிடமாகவும், Ajax, Ontario வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தையல் ஆசிரியை திருமதி பாக்கியம் தர்மலிங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 13.12.2020 Ajax, Ontario இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற தவமணி, சிவலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் குணலஷ்மி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் தர்மலோஜினி (பேபி-லண்டன்), சுரேஷ்குமார் (லண்டன்), ரமேஷ் (கனடா), கேதீஷ் (கனடா), கோணேஷ் (லண்டன்), தர்ஷினி (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், கருணாரட்ணம், பத்மாதேவி, லெனி, சசிகலா, வடிவாம்பிகை, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரதீஷ் - சுரேக்கா, கவிதா, யதுர்ஷினி - றொம், தனுப்பிரியா, கரோலயின், யுதீஷ், சங்கீஷ், சாருகாஷ், குலனேஷ், குகனேஷ், யுவனேஷ், ஜோடேஷ், சந்தோஷ், லதீஷ், **சோபிகா**, லுவனேஷ் ஆகியோரின் ஆருயிர் பாட்டியும், கற்ரியாவின் அருமைப் பூட்டியுமாவார்.

**சடங்குகள் பற்றிய விபரங்கள்:**

பார்வை - 19.12.2020 சனிக்கிழமை மாலை 5:00 மணி முதல் 7:00 மணி வரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, L3R 5G1 Canada.

**ஈமைக் கிரிகைகள்** - அடுத்த நாள் 20.12.2020 ஞாயிறுக்கிழமை மதியம் 12:30 முதல் மாலை 2:30 அதே மண்டபத்தில் இடம்பெற்று.

**தகனம்** - அதே நாள் 20.12.2020 ஞாயிறுக்கிழமை மாலை 3:00 மணிக்கு Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue, Gormley, ON, LOH 1G0, Canada இல் இடம்பெறும்.

தற்போதைய கனேடிய அரசாங்கத்தின் covid -19 சுகாதார கட்டுப்பாடுகளுக்கு அமைய குடும்ப அங்கத்தினர் மட்டுமே இந்த எல்லா நிகழ்வுகளில் பங்குபற்ற முடியும் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| கேதீஷ் (கனடா) | - ++1905424 1100 |
| ரமேஷ் (கனடா) | - ++1 305 586 0529 |
| மனோகரன் (கனடா) | - ++1 647 2837631 |
| சுரேஷ்குமார் (லண்டன்) | - ++44795625 4862 |
| கோணேஷ்(லண்டன்) | - ++44783 112 8960 |
| கருணாரட்ணம் (லண்டன்) | - ++44744 304 4640 |

தோற்றம் 27.01.1933

மறைவு 13.12.2020